# திருமறை ஆசான்

புதிய ஏற்பாட்டுத் தூய கிறிஸ்தவ மாத இதழ்

மலர் - 17 இதழ் - 10 அக்டோபர்- 2004



வெளியிடுவோர்


## கிறிஸ்துவின் சபை

தாராபுரம் ரோடு, காங்கயம் - 638 701.
தமிழ்நாடு. இந்தியா

Ph: 04257 - 230030 Cell : 98427 - 30382 , 98428 - 30382
E-mail : kangayamcofc@eth.net

# BIBLE MEDITATION

**TV PROGRAM**





## ஆசானின் அறிவுரையில் ...


1. ஆசிரியர் உரை ........ 1
2. இன்றைக்கு ஏன் ஒரே ஞானஸ்நானம் இருக்கிறது? ........ 10
3. பெண்கள் பகுதி ........ 13
4. வாலிபர் பகுதி ........ 18
5. சிறுவர் பகுதி ........ 21
6. விசுவாசத்தின் அடிப்படைகள் ........ 24
7. ஒரு பாவம் தானே... ........ 29

# THIRUMARAI AASAAN

**Published by Church of Christ**

S. Rajanayagam — **Editor**

J.C. Choate — **Honorary Editor**

Dharapuram Road, Kangayam - 638 701. Tamilnadu. India.

Pleading for the restoration of pure New Testament Christianity

**Vol. 17 October - 2004 Issue - 10**


ஆசிரியர் உரை

## தாவீதின் சேனை

பரலோகத்தின் தேவனால், அவருடைய ஆவியானவரைக் கொண்டு அருளப்பட்டிருக்கும் வேத வசனங்களனைத்தும் இப்பூலோக மாந்தரின் ஆன்ம நன்மைக்காகவும், ஆவிக்குரிய மேம்பாட்டுக்காகவுமே கொடுக்கப்பட்டுள்ளது. தேவனால் இப்படி கொடுக்கப்பட்டிருக்கும் அனைத்தும், "பிரயோஜனமானவைகள்" என்று, எபேசு பட்டணத்து மூப்பர்களிடத்தில் அப்போஸ்தலன் பவுல் பேசும்போது குறிப்பிடுகிறார். (அப் 20:20). ஆகையால், பரிசுத்த வேதாகமத்தின் ஆரம்பம் தொடங்கி, முடிவு வரையுமுள்ள அனைத்தும், மனுக்குலத்தின் பிரயோஜனத்துக்கானவையே.

ஆகவே தான், கிறிஸ்துவின் காலத்தில் வாழும் நமக்கு வழி காட்டியாக இருக்கும்படியாக சர்வ வல்லவரால் கொடுக்கப் பட்டிருக்கும் புதிய ஏற்பாட்டில், அப்போஸ்தலன் பவுலைக் கொண்டு பரிசுத்த ஆவியானவர் சொல்லும்போது, "தேவவசனத்தினால் உண்டாகும் பொறுமையினாலும், ஆறுதலினாலும் நாம் நம்பிக்கையுள்ளவர் களாகும்படிக்கு, முன்பு எழுதியிருக்கிறவைகளெல்லாம் நமக்குப் **போதனையாக கொடுக்கப்பட்டுள்ளது"** என்கிறார். (ரோம 15:4). இதே பவுலடியார், தான் சொல்லும் இக்கருத்துக்கு வலு சேர்க்கும்படியாக, ஆவியினால் ஏவப்பட்டு, கொரிந்தியருக்கு எழுதும் போது, "இவைக ளெல்லாம் (பழைய ஏற்பாட்டுக்காரியங்கள்) திருஷ்டாந்தங்களாக அவர் களுக்குச் சம்பவித்தது, உலகத்தின் முடிவு காலத்திலுள்ள நமக்கு **எச்சரிப் புண்டாகும்படி** எழுதப்பட்டும் இருக்கிறது (Iகொரி 10:11) என்கிறார். மேற்காணும் வசனங்களை நாம் கவனிக்கும் போது, புதிய ஏற்பாட்டுக் காலத்தில் வாழும் நமக்கு, பழைய ஏற்பாட்டுக் காரியங்கள் போதனையாகவும்,

எச்சரிப்புண்டாகும்படியாகவுமே எழுதிக் கொடுக்கபட்டுள்ளதென்பதை நாம் நிச்சயமாகவே அறிய வேண்டும். இதுதான் உண்மை.

அப்படியானால், நம்மில் எத்தனை பேர் பழைய ஏற்பாட்டைப் படிக்க வேண்டிய விதத்தில் படித்து, அதிலிருந்து போதனைகளையும், எச்சரிப்பையும் பெற்று வருகிறோம், சொல்லுங்கள். ஒருவேளை, உங்களில் பலர், அப்படியெல்லாம் ஒன்றுமில்லை நாங்கள் ஆதியாகமம் போன்ற ஆகமப் புத்தகங்களை அவ்வப்போது படிக்கிறோம் என்றும், யோசுவா, நியாயாதிபதிகள் போன்ற சரித்திர புத்தகங்களை குறிப்புகளுக்காகப் புரட்டுகிறோம் என்றும், ஏன் சங்கீதம், நீதிமொழிகள் போன்ற புத்தகங்களை நேரம் கிடைக்கும் போது தியானிக்கவும் செய்கிறோம் என்றும், இன்னும் ஏன், ஏசாயா, எரேமியா போன்ற தீர்க்கதரிசனப் புத்தகங்களை ஊழியர்கள் பிரசங்கிக்கும் போது கொஞ்சமாவது கவனிக்கிறோம் என்றும் கூறக்கூடும். சரி, உங்களைப் பார்த்து இன்னுமொரு கேள்வி கேட்கிறேன். பழைய ஏற்பாட்டில், பலரால் ஒதுக்கி வைக்கப்பட்டுள்ள நாளாகமம் போன்ற புத்தகங்களையும், அதிலே காணப்படும் சில குறிப்பிட்ட அதிகாரங் களையும் எப்பொழுதாகிலும் கண்டு, வாசித்து, தியானித்து பாடம் கற்றிருக்கிறீர்களா? இப்பொழுது, சொல்லுங்கள் பார்க்கலாம்!

எனக்குத் தெரிய வேதாகமத்தை முறையாகக் கற்க வரும் மாணாக்கர்களே கூட, நாளாகம நூலா, அதிலே படிக்க என்ன இருக்கிறது? சாமுவேலிலும், ராஜாக்களிலும் சொல்லப்பட்டவைகள் திரும்பவும் வரிசைக் கிரமமாகச் சொல்லப்பட்டிருக்கிறது, அவ்வளவு தான். அதை ஏன் படிக்கவேண்டும் என நினைக்கிறார்கள். ஆனால் நாளாகமத்திலும், நாம் வாழும் காலமெல்லாம் நினைவில் வைத்துக் கொள்ளக்கூடிய காரியங்கள் நிறைய உண்டு என்பது தான் உண்மையிலும், உண்மை. இவ்வுண்மையை அநேகர் அறிந்து கொள்ள வேண்டுமென்று தான், இம்மாதம், I நாளாகமப் புத்தகம், 12-ம் அதிகாரத்திலிருந்து தலைப்பைத் தெரிந்துள்ளேன்.

சரி, வேதத்தை நேசிப்பவர்களுக்கு, தாவீது என்ற வார்த்தை ஓர் ஈர்ப்புள்ள வார்த்தை என்பதில் மாற்றுக் கருத்துக்கு இடமில்லை. ஏனெனில், அவனைப் பற்றிப் பேசுவதிலும், எழுதுவதிலும் அவ்வளவு சுவாரசியம் நிறைந்திருக்கிறது. அவனுடைய வாழ்க்கையை நாம் விதவிதமான கோணங்களில் கண்டுகளிக்க முடியும். அவ்வளவு சிறப்புகளுக்குச் சொந்தக்காரன் அவன். அப்படிப்பட்ட தாவீதை நாம் விதவிதமாக அறிந்துவைத்திருந்தாலும், ஆரம்ப நாட்களில் அவனுக்குக் கிடைத்த சேனை பற்றி, நம்மில் அநேகர் அறிய வேண்டிய அளவுக்கு அறிந்திருக்க மாட்டோமென்று நான் தைரியமாக நம்புகிறேன். அந்த சேனை சாதாரண சேனை அல்ல. தாவீதுக்காக, சுக துக்கங்களை மறந்து, இன்னல்கள் பலவற்றை ஏற்றுக் கொண்ட சேனை. தாவீதின் வார்த்தைக்காக தங்கள் பிராணனையே துச்சமென நினைத்த சேனை (Iநாளா 11:19) அவனுடைய

வாழ்வின் முக்கியமான கட்டத்தில், அவன் தன்னை நிலைநிறுத்திக் கொள்வதற்கு அந்த சேனை தான் மிகவும் உறுதுணையாக இருந்திருக்கிறது என்று சொன்னால் அது மிகையாகாது.

பராக்கிரமசாலிகளைக் கொண்ட இச்சேனை பற்றி Iநாளாகமம் 12-ம் அதிகாரத்தில், நம்முடைய கண்களை அகலவிரித்துப் பார்த்தால் நாம் காணலாம். இந்த அதிகாரத்தை எடுத்து, வாசிக்க ஆரம்பித்தாலே நம்முடைய பாஷையில் சொல்வதானால், "போர்" அடிக்கும். நைசாக வேதத்தை மூடி வைத்துவிட்டு வேறு வேலை பார்க்கலாம் என்று எண்ணத் தோன்றும். ஆம், வாயிலே நுழைவதற்கே சிரமப்படும் பெயர்ப்பட்டியல் தான் பிரதானமாக இருக்கும். ஆனால், கவனத்துடனும், தெய்வ பயத்துடனும் வாசித்தால், பாலைவனமாகக் காட்சி தரும் இவ்வதிகாரத்தில், ஆங்காங்கே பசுஞ்சோலைகள் இருப்பதை கண்டிப்பாகக் காணலாம். அத்தோடு தேவ வார்த்தைகளின் மேன்மையையும் நாம் உணரலாம். வாசித்துப் பார்ப்பீர்களா?

சரி, இக்கால கட்டம் தேவச் சித்தப்படி, தாவீது தன்னை ராஜாவாக முடிசூட்டிக் கொள்வதற்கான சகல சாதகச் சூழலும் நெருங்கிவிட்ட சமயம். தன்னை எல்லாவகையிலும் நிலைப்படுத்திக் கொள்வதற்கான வெற்றிகளை உறுதி செய்வதற்கு, நிறைவான தகுதியம்சங்களைக் கொண்ட பராக்கிரமசாலிகள் தேவைப்பட்ட நேரம். அப்பொழுதுதான் இஸ்ரவேலி லிருக்கும், ஏறக்குறைய எல்லாக் கோத்திரத்தைச் சேர்ந்தவகளும், தாமாக முன்வந்து, தாவீதினிடமாகச் சேர்ந்து கொண்டு, தீர்க்கதரிசியின் வாக்கின்படியான வெற்றிக்கு வித்திட்டார்கள்.

உண்மையை உணர்ந்து கொண்டு தாவீதிடம் வலியப் போய்ச் சேர்ந்து கொண்ட அச்சேனையிடம், சகல நற்பண்புகளும் மண்டிக் கிடந்தது. கிட்டதட்ட எல்லாக் கோத்திரத்தாரிடமும் ஏதாவதொரு சிறப்பம்சத்திற்கு குறைவில்லை என்ற நிலை காணப்பட்டது. அவர்களெல்லாரைப் பற்றியும் நாம் இங்கே படிக்க நமக்கு நேரமில்லை. ஆயினும், வேதாகமம், மெய் சத்தியத்தின்படியான கிறிஸ்தவர்களை போர்ச் சேவகர் என்று கூறுகிறபடியாலும் (IIதீமோ 2:3,4) ஒவ்வொரு உண்மையான கிறிஸ்தவனும் கர்த்தருடைய சபையாகிய சேனையின் அங்கமாயிருக்கிறபடியாலும், நாம் தாவீதின் சேனையிலிருந்த பராக்கிரமசாலிகள் பற்றிப் படிப்பது, நம்முடைய கிறிஸ்தவ ஜீவியத்தில் நாம் எப்படிப்பட்ட தன்மை கொண்ட வர்களாக இருக்க வேண்டுமென்பதை நமக்குக் காட்டுமாகையால், அது பற்றி கொஞ்சம் தெரிந்து கொள்வோம்.

## I மனமுவந்து செயல்படுகிற, சோதனைகள் கண்டு கலங்காத "காத்தியர்" (Iநாளா 12:8-15)

தாவீதுடைய சேனையிலிருந்த காத் கோத்திரத்தாரிடமிருந்து நமக்குக் கிடைக்கும் முதல் பாடம், அவர்கள் மனமுவந்து செயல்படுகிற வர்களாகவும், சோதனைகளைக் கண்டு கலங்காதவர்களாகவும் இருந்தார்கள் என்பது.

ஆம், சிங்கம் போன்ற வீரமும், வெளிமான் போன்ற வேகமும் கொண்ட காத்தியர், **தாங்களாகவே முன்வந்து, தாவீதின் பட்சத்திலே சேர்ந்தார்கள்** என்று வசனம் கூறுகிறது (வச. 8) தாவீதின் பட்சத்திலே வந்து சேருங்கள் என்று இவர்களை யாரும் நிர்பந்திக்கவோ, ஆதாயம் கிடைக்கும் என்று ஆசைகாட்டவோ, ஆபத்து வரும் என்று மிரட்டவோ இல்லை. தேவனுடைய வார்த்தையின் யதார்த்த நிலையை சீர்தூக்கிப் பார்த்திருக்கிறார்கள். கர்த்தர், இப்பொழுது ஆட்சிக் கட்டிலில் அமர்ந்திருக்கும் சவுலின் பட்சத்திலிருக்கிறாரா அல்லது இன்னமும் ஓடி ஒளிந்து கொண்டிருக்கும் தாவீதினிடத்திலிருக்கிறாரா என்று கவனித்துப் பார்த்திருக்கிறார்கள். கர்த்தர் தாவீதின் பக்கம் தான் என்பதை சாமுவேல் தீர்க்கனின் வார்த்தைகள் வழியாகக் (Iநாளா 11:2) கண்டு கொண்டு, அவர்களாகவே தாவீதின் பட்சத்தில் போய்ச் சேருவோம் என்று வந்திருக்கிறார்கள்.

இந்த விதமாக அவர்கள் சிந்தித்து செயல்பட்டது ஒரு சாதாரண விஷயம் அல்ல. சாமுவேல் தீர்க்கனைக் கொண்டு குறைந்த இடங்களிலே தான் இவ்வுண்மையை தேவன் வெளிப்படுத்தியிருந்தார் (Iசாமு 15:23-16:3, 24:20; IIசாமு 5:10,12) ஆயினும், அவர்கள் எது சரி என்பதைக் கண்டுபிடித்துத் தீர்மானம் செய்து, தாவீதின் பட்சத்தில் மனப்பூர்வமாய்ச் சேர்ந்திருக்கிறார்கள்.

இந்த உண்மையை இன்றைய கிறிஸ்தவ உலகத்தோடு சற்று ஒப்பிட்டுப் பார்ப்போம். சபைகள் என்ற பெயரில் ஏராளமான பிரிவினைக் கூட்டங்கள் கிறிஸ்தவ மத உலகில் நிறைந்து காணப்படுகிறது எது, தேவனுடைய பார்வையில் சரியானது என்றும், எந்த சபையிடம் அங்கமாவது நியாயம் என்றும் தெரியாமல், கிறிஸ்தவ உலகம் தடுமாறிக்கொண்டுள்ளது. இத்தனைக்கும் ராஜ்யமாகிய சபை பற்றி பல தீர்க்கதரிசிகள் தெளிவாகவும், துல்லியமாகவும் தீர்க்கதரிசனம் உரைத்திருக்கிறார்கள் (தானி 2:44, ஏசா 2:2,3, யோவே 2:28-32) ஆயினும், எதுசரி என்று அநேகர் இன்னும் கண்டுபிடித்த மாதிரி தெரியவில்லை. இவ்விஷயத்தில் காத் புத்திரரைப் போல, தேவனுடைய வசனங்களினடிப்படையில், உண்மை எதுவென்று கண்டுபிடிப்பது நம்முடைய தலையாய கடமையென்பதை நாம் மறந்துவிடக் கூடாது.

காத் புத்திரர் குறித்து வேதாகமம் வெளிப்படுத்துகிற இன்னொரு காரியம், அவர்கள் "யோர்தானில் வெள்ளம் கரைபுரண்டு ஓடுகின்ற முதலாம் மாதத்தில்" (வச. 15). யோர்தானைக் கடந்திருக்கிறார்கள் என்பது. வெள்ளப் பெருக்கின்போது, யோர்தானை மட்டுமல்ல, எந்த ஒரு பெரிய நதியையும் கடப்பது மிகவும் ஆபத்தானது. ஆனாலும், அவர்கள் கடந்து போய் செய்ய வேண்டியதைச் செய்திருக்கிறார்கள். இது, கர்த்தருக்காகக் காரியமாற்றுவதில் அவர்களுக்கிருந்த நெஞ்சுரத்தைக் காட்டக் கூடியதாகவும், எதிர்ப்பைக் கண்டு அஞ்சாத தீரத்தைப் பறைசாற்று வதாகவும் உள்ளது.

அருமையானவர்களே, இன்றைக்கு நம்முடைய நிலை எப்படியிருக்கிறது? எது நீதி என்று கண்டுபிடிக்கும் விஷயத்திலும், அப்படிக் கண்டுபிடித்ததற்குப் பிறகு, அதற்காகச் செயல்படுகிற விஷயத்திலும் நாம் எப்படிப்பட்டவர்களாயுள்ளோம்? சிந்திப்போம். **ஒரே ஒரு தீர்க்கதரிசியினுடைய** வார்த்தையினடிப்படையில் காத்தியர் எப்படி செயல்பட்டிருக்கிறார்கள் என்று எண்ணிப்பாருங்கள்! இன்றைக்கு நமக்கு, உண்மையான சபை பற்றி **பிரபல தீர்க்கதரிசிகளும்,** தேவனுடைய **ஒரே பேரான குமாரனாகிய இயேசு கிறிஸ்துவும்** எவ்வளவு சொல்லியிருக்கிறார்கள் என்று ஆராய்ந்து பாருங்கள். ஒரு வேளை, நாம், உண்மையான சபை எது என்று கண்டுபிடிக்கிற விஷயத்திலும், அதை அடைவதற்கு எடுக்க வேண்டிய முயற்சிகள் பற்றிய காரியத்திலும் எதுவும் செய்யாதவர்களாக இருந்தால், இந்த காத்தியரிடமிருந்து இப்பொழுதே பாடம் கற்று, செய்ய வேண்டியதை உடனடியாகச் செய்வோம்.

## II <u>காரியத்தில் தெளிவும், உண்மையோடு சமரசம் செய்து கொள்ளாத போக்கும் கொண்ட "பென்யமீனர்" (வச 18)</u>

தாவீதின் சேனையிலிருந்த பென்யமீன் கோத்திரத்தாரிடமிருந்து, நம்மால் கற்றுக்கொள்ள முடிகின்ற பாடம், அவர்கள், தங்கள் நிலையில் தெளிவும் உறுதியுமுள்ளவர்களாய் இருந்தது மட்டுமல்லாமல், உண்மையோடு சமரசம் செய்து கொள்ளாதவர்களாகவும் இருந்தார்கள் என்பது I நாளா 12:18-ல் பென்யமீனர், **தாவீதே, நாங்கள் உம்முடையவர்கள், ஈசாயின் குமாரனே, உமது பட்சமாயிருப்போம், உமக்குச் சமாதானம், சமாதானம், உமக்கு உதவி செய்கிறவர்களுக்கும் சமாதானம், உம்முடைய தேவன் உமக்குத் துணை நிற்கிறார்** என்கிறார்கள். "அப்பொழுது ராஜாவாக இருந்த சவுலின் சொந்தக் கோத்திரத்தைச் சேர்ந்த இவர்கள், தேவனுடைய சித்தத்தை அறிந்து, அதற்குத் தங்களை முழுமையாக ஒப்புக்கொடுத்து, தாவீதினிடமாக வந்து சேர்ந்தபோது, சவுலின் கோத்திரத்தைச் சேர்ந்த தங்களைக் குறித்து தாவீதுக்கு எந்த சந்தேகமும் வரக்கூடாது என்று எண்ணி, "**தாவீதே, நாங்கள் உம்முடையவர்கள்**" என்று அடித்துச் சொல்லுகிறார்கள்.

பென்யமீன் கோத்திரத்தாரின் இந்த வெளிப்படையான அறிக்கை, இன்றைக்கு கிறிஸ்தவர்கள் என்று சொல்லிக் கொண்டு இரண்டும் கெட்டான் நிலையில் ஜீவிப்பவர்களுக்கு மரண அடி கொடுக்கக் கூடியதாயிருக்கிறது. நாங்களும் கிறிஸ்தவர்கள் என்று சொல்லுகிறவர்கள், தங்கள் நிஜ வாழ்க்கையில், யார் பக்கம் நிற்கிறார்கள் என்பதே அவ்வளவு லேசில் தெரிவதில்லை. ஆம், ஞாயிற்றுக்கிழமை காலையில் பார்த்தால், கர்த்தர் பக்கம் தான் இந்த சகோதரன் இருக்கிறான் என்று எண்ணத் தோன்றும். ஆனால், அதே மத்தியானம் அவர் இருக்கிற நிலையைப் பார்த்தால், பிசாசின் கொத்தடிமையாக பரிதாபமாகக் காட்சியளிப்பார். சில நேரங்களில், வீடு சந்திப்புக்கும் போகும் போது அடப் பரவாயில்லையே

இந்த அம்மா இவ்வளவு அடக்கமாக, பக்தியாக இருக்கிறார்களே என்பது போலத் தெரியும். ஆனால், அடுத்த வாரம், நாம் பெரிதாக நினைத்த அந்த அம்மா பற்றி, நாம் நம்பினதற்கு மாறாகக் கேள்விப்பட நேரிடும். இன்னும் சில நேரங்களில், சில குடும்பத்துப் பிள்ளைகளைப் பார்த்தால் பரவாயில்லையே, பெற்றோர்கள் இவர்களை நன்றாக வளர்த்திருக்கிறார்கள்; மிகவும் ஒழுக்கமாக இருக்கிறார்களே என்று பெருமைப்படச் சொல்லும். ஆனால், கொஞ்ச காலம் கழித்து அவர்கள் சுயரூபம் வெளியே வரும் போது, இதுவும் போச்சா, என்று அவர்களைக் கண்டாலே ஒதுங்கிப் போகச் சொல்லும். இதுதான் இன்றைய கிறிஸ்தவத்தின் பெரிய பிழையேது மில்லாத பிரதிபலிப்பு.

அன்பானவர்களே, நான் இப்படியெல்லாம் சொல்வதற்காக நீங்கள் என்மீது சங்கடப்பட வேண்டாம். திறந்த மனதோடு சுற்றிலும் என்ன நடக்கிறதென்பதைக் கவனித்துப் பார்த்து, நான் சொல்லுவது ஓரளவுக் காகிலும் சரியா, இல்லையா என்று பாருங்கள். உண்மை உங்களுக்கே தெரியும்.

நாம் கர்த்தரின் பக்கமா அல்லது அவரது எதிராளியாகிய பிசாசின் பக்கமா என்று தெரியாத ஒரு கிறிஸ்தவ வாழ்க்கை வாழக்கூடாது. இந்த பென்யமீன் கோத்திரத்தார் அப்படிப்பட்டவர்களாயிருக்கவில்லை. யார் பக்கம் தாங்கள் நிற்கிறோம் என்பதைத் தங்கள் சொல்லாலும், செயலாலும் நிரூபித்துக் காட்டினார்கள்.

நம்முடைய ஆன்மீக வாழ்க்கையில் நாம் யார் பக்கம் என்பதைத் தெளிவாக்காத ஒரு பக்தி வாழ்க்கையை தேவன் ஒருபோதும் ஏற்றுக்கொள்ளுவதில்லை. மாத்திரமல்ல, அதை அவர் கடுமையாகக் கண்டிகிறார். ஆசியாவிலிருந்த ஏழு சபைகளில் ஒன்றாகிய லவோதிக் கேயருக்கு, யோவானைக் கொண்டு இயேசு சொல்லிய போது, "உன்கிரியைகளை அறிந்திருக்கிறேன், நீ குளிருமல்ல அனலுமல்ல; நீ குளிராயாவது அனலாயாவது இருந்தால் நலமாயிருக்கும். இப்படி நீ குளிருமின்றி, அனலுமின்றி வெதுவெதுப்பாயிருக்கிறபடியினால் உன்னை என் வாயினின்று வாந்தி பண்ணிப் போடுவேன்" என்றார் (வெளி. 3:16) பழைய ஏற்பாட்டிலே, இஸ்ரவேலைப் பாங்காக வழிநடத்தின யோசுவாவும் இதையே தான் சொல்லியுள்ளார். "கர்த்தரைச் சேவிக்கிறது உங்கள் பார்வைக்கு ஆகாததாய் கண்டால் பின்னை யாரைச் சேவிப்பீர்கள் என்று இன்று தெரிந்துகொள்ளுங்கள். நதிக்கு அப்புறத்தில் உங்கள் பிதாக்கள் சேவித்த தேவர்களைச் சேவிப்பீர்களோ? நீங்கள் வாசம் பண்ணுகிற தேசத் துக் குடிகளாகிய எமோரியரின் தேவர்களைச் சேவிப்பீர்களோ நானும் என் வீட்டாரு மோவென்றால், கர்த்தரையே சேவிப்போம். (யோசு 24:15)" என்றான். இன்னும் ராஜாக்களின் நாட்களில் எலியா தீர்க்கனும், "நீங்கள் எந்த மட்டும் இரண்டு நினைவுகளில் குந்திக் குந்தி நடப்பீர்கள். கர்த்தர் தெய்வமானால் அவரைப் பின்பற்றுங்கள். பாகால் தெய்வமானால் அவனைப் பின்பற்றுங்கள் என்றே கூறியுள்ளான் (Iராஜா 18:21). ஆகவே, நாம் நம் முடைய பக்தி நிலையில் தெளிவுள்ளவர்களாயிருக்க வேண்டியது அவசியம்.

இந்த பென்யமீனைப் பற்றி நாம் கவனிக்க வேண்டிய இன்னொரு விஷயம், வசனம் 29-,ல் உள்ளது, "....... அதுவரைக்கும் அவர்களில் மிச்சமானவர்கள் சவுலின் குடும்பத்தைக் காப்பாற்றப் பார்த்தார்கள்" என்பது ஒரு குறிப்பிட்ட காலம் வரைக்கும், தவறின் பக்கம் நின்றவர்கள், நியாயம் எது, நீதி என்று தெரிந்த பிறகு, தவறை விட்டு விட்டு, நீதியின் பக்கம் நின்றிருக்கிறார்கள். **சவுல் தங்கள் கோத்திரத்தான்** என்பதற்காக, நீதியோடு அவர்கள் சமரசம் செய்து கொள்ளவுமில்லை, நியாயத்தைக் கண்டும், காணாதவர் போலிருக்கவுமில்லை. ஆனால், நாம் எப்படி? எது சத்தியம் என்பதை மணிக்கணக்காக, நாள்கணக்காக, வாரக்கணக்காக கேட்டுவிட்டு, ரொம்பவும் சாவகாசமாக, நீங்கள் சொல்வதெல்லாம் சரியாகத்தான் இருக்கிறது. ஆனால், இந்த ஊழியர் எங்க ஆளுங்க, அந்த ஐயா எங்க ஊருங்க, அந்த பாஸ்டர் எங்க ஏரியாக்காரருங்க என்று இப்படிப் பல "ங்க" களைச் சொல்லிவிட்டு, இப்போ என் நிலைமையை "நீங்களே யோசித்துப் பாருங்கள்" என்று போதித்தவர்களைப் பார்த்துச் சொல்லுகிறோம். அப்படித்தானே! இது எப்படி நியாயமாகும் என்பதைவிட எப்படித்தான் நியாயமாகும்? சொல்லுங்களே.

அருமையானவர்களே, தயவு செய்து, தேவகாரியத்தில் நாம் சமரசம் செய்து கொள்ளவேண்டாம். உறவுக்காகவும், பழக்கத்திற்காகவும், ஊருக்காகவும் நாம் சத்தியத்தோடு சமரசம் செய்து கொள்ள வேண்டாம். மெய்ச்சத்தியத்தை இடது கையினாலே தூக்கி ஓர் ஓரத்திலே வைக்கவும் வேண்டாம். மாறாக, இந்தப் பென்யமீனர் போல, தெளிவுள்ளவர்களாயிருந்து, சத்தியத்தின் பக்கம் உறுதியோடு நிற்போம்.

### III அணியைக் காத்து நின்று, வஞ்சனையில்லாமல் செயல்பட்ட செபுலோனியர் (12:33)

தாவீதுடைய சேனையின், செபுலோன் கோத்திரத்தாரிடமிருந்து நமக்குக் கிடைக்கின்ற பாடம், அவர்கள் ஒற்றுமையுடன் வஞ்சனையில்லாமல் செயல்பட்டார்கள் என்பது.

இந்த செபுலோன் கோத்திரத்தாரைக் குறித்துப் படிப்பதற்குப் பெரிதாக ஒன்றுமில்லையென்று நாம் இதுகாறும் எண்ணிக் கொண்டிருந்தோம் தானே! ஆனால், இவர்கள் யார் என்பதைக் கொஞ்சம் கவனியுங்கள். "செபுலோன் புத்திரரில் சகலவித யுத்த ஆயுதங்களாலும் யுத்தம் செய்கிறதற்கும், தங்கள் **அணியைக் காத்து நிற்கிறதற்கும் பழகி, வஞ்சனை செய்யாமல்** யுத்தத்திற்குப் போகத்தக்கவர்கள் **ஐம்பதினாயிரம்** பேர் (I நாளா 12:33) இவர்களுக்கு மிகுந்த பெருமை சேர்க்கும் இரண்டு வார்த்தைகள், இவ்வசனத்தில் உள்ளது. முதலாவது அணியை காத்து

நிற்பவர்கள், அதாவது, தனித்தனியாக அல்லாமல் ஓரணியில் நின்று ஒற்றுமையுடன் செயல்படுகிறவர்கள். இரண்டாவது, வஞ்சனை செய்யாதவர்கள். அதாவது ஏமாற்றத் தெரியாதவர்கள், நேர்மையானவர்கள்.

இதை வாசித்துக் கொண்டிருக்கும் உங்களைப் பார்த்து நான் ஒன்று கேட்கிறேன். நம்முடைய கண்களுக்குத் தெரிகின்ற கிறிஸ்தவத்தில், இந்த இரண்டு குணங்களையும் கொண்ட கிறிஸ்தவர்கள் எத்தனை பேர் இருக்கிறார்கள்? கிறிஸ்துவுக்காக, அவர் கட்டின ஒன்றான மெய்ச்சபையின் வளர்ச்சிக்காக அணி உணர்வுடன் ஒற்றுமையாகவும், செயல்பட வேண்டும் என நினைப்பவர்கள் எவ்வளவு பேர் உள்ளனர்? கிறிஸ்தவர்களுக்கும், ஒற்றுமைக்கும் என்ன சம்பந்தமிருக்கிறது என்று கேட்கக் கூடிய நிலை சமுதாயத்தில் எப்படியோ தோன்றிவிட்டதா? இல்லையா? ஒற்றுமை யின்மையின் காரணமாக தங்களுக்குள் வரும் பிரச்சினைகளுக்கு, தங்கள் கைகளிலுள்ள வேதவசனங்களின்படி தீர்வுகான முடியாமல், கிறிஸ்தவம் நீதிமன்றப் படிகளில் ஏறி இறங்கிக் கொண்டிருக்கிறதா? இல்லையா? ஞாயிற்றுக்கிழமைகளில் கையிலே வேதாகமத்தை சுமந்து திரிகிற நம்மை, சுற்றிலுமிருக்கிற சமுதாயம் எப்படிப்பட்ட கண்ணோட்டத்தோடு நம்மைப் பார்க்கிறது? சொல்லுங்கள்.

இந்தக் கேள்விக்கான பதில் அவ்வளவு திருப்திகரமாக இல்லையென்று தானே எண்ணுகிறீர்கள். உங்கள் கருத்து, சரிதான். அப்படியானால், இந்த அவல நிலைக்கான காரணத்தைக் கண்டுபிடிக்க கையிலே பூத கண்ணாடி வைத்துக் கொண்டு அலையத் தேவையில்லை. பளிச்செனத் தெரிகிற ஒரே காரணம் "ஒற்றுமையில்லாதது" தான். நன்றாக நினைவில் வைத்துக் கொள்ளுங்கள், செபுலோனியர் 50,000 பேர் ஒற்றுமையுடன் இருந்திருக்கிறார்கள். நம்மை வெட்கத்தில் ஆழ்த்துகிற விஷயமாக இது இருக்கிறது.

ஒற்றுமையை வலியுறுத்தி ஏராளமான வசனங்கள் நமக்கு கொடுக்கப்பட்டிருக்கிறது. பவுலடியார், கொரிந்தியர்களுக்கு எழுதும் போது, "சகோதரரே, நீங்களெல்லாரும் **ஒரே காரியத்தைப் பேசவும், பிரிவினைகளில்லாமல் ஏகமனதும், ஏக யோசனையுமுள்ளவர்களாய்ச் சீர்பொருந்தியிருக்கவும் வேண்டுமென்று, நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே உங்களுக்குப் புத்தி சொல்லுகிறேன்** என்கிறார். (Iகொரி 1:10) அதே பவுல் IIகொரி 12:18-ல் **ஒரே ஆவியை உடையவர்களாய்** ஒரே அடிச்சுவட்டில் நடக்க வேண்டு மென்று கூறுகிறார். இன்னும் பேதுரு அப்போஸ்தலன், கிறிஸ்தவர்கள், **ஒருமனப் பட்டவர்களாகவும், சகோதர சிநேகமுள்ளவர்களாகவும்,**

**இணக்கமுள்ளவர்களாகவும்** இருக்க வேண்டுமென்று கூறுகிறார். (Iபேது 3:8). இவ்வளவு வேத வசனங்களை வைத்துக்கொண்டு நாம் ஒற்றுமை யில்லாமல் இருக்கலாமா? இவ்விஷயத்தில் செபுலோன் புத்திரரிடமிருந்து நாம் பாடம் கற்றுக்கொள்வோம்.

இந்த செபுலோனியரிடம் நாம் கவனிக்க வேண்டிய இன்னொன்று அவர்கள் வஞ்சனையில்லாதவர்களென்பது. அதாவது, சொல்லுகிறபடி செய்கிறவர்கள். தாவீதின் சேனை வெற்றியடைந்ததற்கான காரணங்களில் பலமான காரணம், வஞ்சனையற்ற செபுலோனியர் போன்றவர்கள்.

ஏமாற்று இருக்கிற எந்த ஒரு இடமும் இருக்க வேண்டிய அளவில் இருக்காது. அது குடும்பமாக இருந்தாலும், சமுதாயமாக இருந்தாலும், தேசமாக இருந்தாலும் இதுதான் உண்மை. இதை நாம் கண் கூடாகவே பார்த்து வருகிறோம். இந்த உண்மை சபைக்கும் அப்படியே பொருந்தும்.

ஆகவே, ஒரு சபை, சத்தியத்தின்படியான சபையாக இருந்து, தனது ஊழியக் காரியங்களில் ஜெயம் அடைய வேண்டுமானால், அதன் அங்கத்தினர்கள் வஞ்சனை செய்யாதவர்களாக இருக்க வேண்டும். அது எப்படி என்கிறீர்களா? யாக்கோபு 1:22-ஐப் படியுங்கள் ! "அல்லாமலும், **நீங்கள் உங்களை வஞ்சியாதபடிக்குத் திருவசனத்தைக் கேட்கிறவர் களாய் மாத்திரமல்ல அதின்படி செய்கிறவர்களாயும் இருங்கள்**" என்கிறார். ஆகவே நாம் செபுலோனியர் போல வஞ்சனையற்றவர்களா யிருப்போம். அதற்காக, திருவசனத்தை மாத்திரம் படிக்கிறவர் களாகவும், கேட்கிறவர்களாகவும், அதின்படி மாத்திரம் செய்கிறவர்களாகவும் இருப்போம்.

அன்பானவர்களே, தாவீதின் சேனை, இப்படி சிறப்பான குணங்கள் கொண்டு செயல்பட்டதால் கிடைத்த மிகப்பெரிய நன்மை பற்றி, அந்த 12-ம் அதிகாரத்தின், கடைசி வசனத்தின் இறுதிப்பகுதி, "**இஸ்ரவேலில் மகிழ்ச்சியுண்டாயிற்று**" என்று கூறுகிறது. (Iநாளா 12:40)

எப்பொழுது "மகிழ்ச்சி" வந்தது என்று பாருங்கள், இறுதியில் தான், ஆகவே நம்முடைய தனிப்பட்ட வாழ்க்கையிலும், குடும்ப வாழ்க்கையிலும், சபை வாழ்க்கையிலும் மகிழ்ச்சி உண்டாக வேண்டுமானால், தாவீதின் சேனை போன்ற குணாதிசயம் உள்ளவர்களாக இருக்க வேண்டுவது அவசியம். குறிப்பாக, நாம் பார்த்த காத்தியர் போலவும், பென்யமீனர் போலவும் செபுலோனியர் போலவும் இருக்க வேண்டும். இருப்போமா?

நீங்கள் அப்படியிருக்க தேவன் உங்களுக்கு உதவி செய்வாராக!

ஆமென் !

**செ. ராஜநாயகம்.**

சென்ற மாதத் தொடர்ச்சி

# இன்றைக்கு ஏன் ஒரே ஞானஸ்நானம் இருக்கிறது?

**வே**தாகமத்தில் துன்மார்க்கர் அக்கினியிலே போடப்படுவது பற்றி நாம் எங்கு வாசிக்கிறோம்? முதலாவதாக நாம் பார்ப்போமானால், கிறிஸ்து ஒரு நாளில் உலகத்தை நியாயந்தீர்ப்பார் என்றும் துன்மார்க்கர் நரகத்திலே தள்ளுண்டுபோவார்கள் (2 பேதுரு 2:4) அல்லது நித்திய ஆக்கினையை அடைவார்கள் (மத். 25:46) என்றும் வாசிக்கிறோம். மீண்டுமாக, நரகம் அக்கினி கடல் என்று வர்ணிக்கப்படுகிறது (2 பேதுரு 3:7, யூதா 7; வெளி. 20:10,14; 21:18) அப்படியானால், துன்மார்க்கர், அநீதிமான்கள், இழந்துபோனவர்கள் நித்திய ஆக்கினையான அக்கினி கடலில் பங்கடைவார்கள். ஆகவே, நன்றாக சிந்திக்கிற எவரும் அக்கினியில் ஞானஸ்நானம் பெற (அல்லது மூழ்க) விரும்பமாட்டார்கள்.

I கொரிந்தியர் 10:1-4ல் பவுல் எழுதுகையில், "இப்படியிருக்க சகோதரரே, நீங்கள் எவைகளை அறியவேண்டுமென்றிருக்கிறே னென்றால்; நம்முடைய பிதாக்களெல்லாரும் மேகத்துக்குக் கீழாயி ருந்தார்கள், எல்லாரும் சமுத்திரத்தின் வழியாய் நடந்து வந்தார்கள். எல்லாரும் மோசேக்குள்ளாக மேகத்தினாலும் சமுத்திரத்தினாலும் ஞானஸ்நானம் பண்ணப்பட்டார்கள். எல்லாரும் ஒரே ஞானபோஜனத்தைப் புசித்தார்கள், எல்லாரும் ஒரே ஞானபானத்தைக் குடித்தார்கள். எப்படி யெனில், அவர்களோடே கூடச் சென்ற ஞானக்கன்மலையின் தண்ணீரைக் குடித்தார்கள். அந்தக் கன்மலை கிறிஸ்துவே, என்கிறார். அந்த நாட்களிலே அது ஞானஸ்நானமாக எண்ணப்படா விட்டாலும், இஸ்ரவேல் கடல் நடுவே கடந்து போகிறதையும், இருபுறமும் தண்ணீர் சூழ்ந்திருந்ததையும், மேகம் அவர்கள் மேல் இருந்ததையும் கண்ட பவுல் அதை ஞானஸ்நானம் என விவரிக்கிறார். வேறு வார்த்தைகளில் சொன்னால், அவர்கள் மேகத்திலும், கடலிலும் மூழ்கினார்கள் அல்லது அடக்கம் பண்ணப்பட்டார்கள்.

செபெதேயுவின் பிள்ளைகளின் தாய், தன் மகன்கள் கிறிஸ்துவின் சிங்காசனத்தின் ஒருபுறம் ஒருவனும், மறுபுறம் இன்னொருவனும் அமரும்படி அருளவேண்டும் என கேட்ட போது, "இயேசு பிரதியுத்தரமாக நீங்கள் கேட்டுக்கொள்ளுகிறது இன்னது என்று உங்களுக்குத் தெரியவில்லை. நான் குடிக்கும் பாத்திரத்தில் நீங்கள் குடிக்கவும், நான் பெறும் ஸ்நானத்தை நீங்கள் பெறவும் உங்களால் கூடுமா என்றார். அதற்கு

அவர்கள் கூடும் என்றார்கள். அவர் அவர்களை நோக்கி என் பாத்திரத்தில் நீங்கள் குடிப்பீர்கள், நான் பெறும் ஸ்நானத்தையும் நீங்கள் பெறுவீர்கள்; ஆனாலும், என் வலது பாரிசத்திலும் என் இடது பாரிசத்திலும் உட்கார்ந் திருக்கும்படி என் பிதாவினால் எவர்களுக்கு ஆயத்தம் பண்ணப்பட்டிருக் கிறதோ அவர்களுக்கேயல்லாமல், மற்றொருவருக்கும் அதை அருளுவது என் காரியமல்ல என்றார் (மத். 20:22,23) மீண்டுமாக கிறிஸ்து சொல்கிறார், "நான் மூழ்க வேண்டிய ஒரு ஸ்நானமுண்டு...." (லூக். 12.50) என்று. இங்கே அவர் பேசுகிற ஸ்நானம், அவருடைய சிலுவைபாடுகள், அதிலே அவர் மூழ்கினார். அதிலே அவர் ஒரே ஒரு முறை தான் மூழ்கினார் என்பதை நாம் அறிவோம்.

இறுதியாக, விசுவாசிகளின் ஸ்நானத்தை குறித்து வேதம் சொல்கிறது. இந்த ஞானஸ்நானம் தண்ணீரிலே எடுக்கப்படும் (அப். 8:26-39), இது ஒரு அடக்கம் (கொலோ. 2:12; ரோமர். 6:3-4), அது பாவ மன்னிப்புக்காக எடுக்கப்படும் (அப். 2:38) பாவங்கள் போக கழுவப்பட (அப். 22:16) இரட்சிக்கப்பட (Iபேது 3:21) ஒருவரை கிறிஸ்துவுக்குள்ளாக (கலா. 3:26,27) ஒருவரை சபைக்குட்படுத்த (Iகொரி 12:!3) அது இயேசுவின் நாமத்தில் செய்யப்படவேண்டும் (அப். 2:38) அதாவது, பிதா, குமாரன், பரிசுத்த ஆவியின் நாமத்தினால் அது கொடுக்கப்பட வேண்டும். (மத்தேயு 28:19,20) கிறிஸ்து சொன்னார், "பின்பு அவர் அவர்களை நோக்கி; நீங்கள் உலகமெங்கும் போய், சர்வ சிருஷ்டிக்கும் சுவிசேஷத்தைப் பிரசங்கியுங்கள். விசுவாசமுள்ளவனாகி ஞானஸ்நானம் பெற்றவன் இரட்சிக்கப்படுவான், விசுவாசியாதவனோ ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்படுவான்" (மாற்கு 16:15,16).

எபேசியர் 4:4-6-க்கு நாம் திரும்பிப்போனால் அங்கு பவுல் ஒரே ஞானஸ்நானம் உண்டு என்று கூறுகிறார். சுமார் கி.பி. 64 வாக்கில் அதை அவர் கூறுகிறார். ஆனால், வேதாகமத்திலிருந்து நாம் படித்த ஸ்நானங்களுள், அந்த ஒரே ஞானஸ்நானம் எது? அதை கண்டுபிடிக்க எளிதான வழி என்ன வென்றால், எப்பொழுதெல்லாம் பேசப்படும் ஸ்நானம் தண்ணீர் ஞான ஸ்நானமாகவோ அல்லது விசுவாசிகளின் ஸ்நானமாகவோ இல்லையோ அங்கு என்ன ஸ்நானம் பற்றி பேசப்படுகிறது என்பது சொல்லப்படும். வேறு வார்த்தையில் சொல்லவேண்டுமானால், வேதாகமம் பரிசுத்த ஆவியின் ஸ்நானம், அக்கினி ஸ்நானம், யோவானின் ஸ்நானம், துன்பத்தின் ஸ்நானம், மேகத்திலும், கடலிலும் பெற்ற ஸ்நானம் என்று பேசுகிறது. ஆகையால், எபேசியர் 4:4-6ல் நாம் ஒரே ஞானஸ்நானத்தை பற்றி வாசிக் கையில், நாம் இது விசுவாசிகளின் ஞானஸ்நானம் என்று முடிவு செய்யவேண்டும்.

பரிசுத்த ஆவியானவரின் ஸ்நானம் நம்முடைய காலத்திற்கும் பொருந்தும் என்று சிலர் கூறுவதை நாம் கேட்கிறோம், ஆனால் அந்த ஞானஸ்நானம் கிறிஸ்துவால் அப்போஸ்தலர்களுக்கு வாக்காக கொடுக்கப்பட்டது. அவர் தான் அதை கொடுக்கிறவர். அந்த ஸ்நானம் ஒரு குறிப்பிட்ட நோக்கத்திற்காக கொடுக்கப்பட்டது. இன்றைக்கும் யாருக்கும் பரிசுத்த ஆவியின் ஸ்நானம் கொடுக்கப்படுவதில்லை. இன்னும் சிலர் தண்ணீர் ஞானஸ்நானத்தைப் பற்றி போதிக்கிறார்கள், ஆனால் அந்த விசுவாசி இரட்சிக்கப்பட்டுவிட்டார், அதை கண்பிக்கவே அவர் ஞானஸ்நானம் பண்ணப்படுகிறார் என்கிறார்கள். அவர்கள் சொல்வது சரி என்றால், அந்த நபர் கிறிஸ்துவுக்கும், அவரின் சபைக்கும் வெளியே இரட்சிப்பை பெருகிறார், ஏன் என்றால் ஞானஸ்நானத்தின் மூலமே நாம் சபைக்குள்ளும், கிறிஸ்துவுக்குள்ளும் போகிறோம் (கலா. 3:26,27 Iகொரி 12:13). இந்த ஜனங்கள், இங்கே தவறு இழைக்கிறார்கள் என்பது நமக்கு தெளிவாகிறது.

ஞானஸ்நானத்தை பொருத்தவரையில் தெளித்தல் மற்றும் ஊற்றுதல் என்பது தேவனுடைய வார்த்தையை எவ்வளவு தூரம் புரட்ட முடியுமோ, அவ்வளவு புரட்டியதால் வந்த விளைவு. ஒருவனுடைய தலையில் ஊற்றப்படுவதோ அல்லது தெளிக்கப்படுவதோ எவ்வகையிலும் ஞானஸ்நானம் என்று அழைக்கப்பட முடியாது. ஞானஸ்நானம் என்பது ஓர் அடக்கம். ஒரு முழுகுதல். தெளிப்பது தெளிப்பது தான், ஊற்றுவது ஊற்றுவதுதான். அவைகள் ஞானஸ்நானங்கள் ஆகாது. இவைகள் மனிதனால் உண்டானது.

இப்போது கேள்வி இதுதான் வேதாகமத்தின் அந்த ஒரே ஸ்நானத்தை நீங்கள் ஏற்றுக்கொண்டிருக்கிறீர்களா? இல்லை என்றால், அதை நீங்கள் செய்ய வேண்டும். புதிய ஏற்பாட்டின் அப்போஸ்தலர் புத்தகத்தை நாம் வாசிக்கையில், கர்த்தருக்கு கீழ்ப்படிந்த எல்லாரும், கிறிஸ்துவின் நற்செய்தியை அல்லது சுவிசேஷத்தை கேள்விப்பட்டு, தேவன் மற்றும் கிறிஸ்துவின் மேல் விசுவாசம் வைத்து, பாவத்திலிருந்து மனந்திரும்பி, கிறிஸ்துவை தேவ குமாரன் என்று அறிக்கையிட்டு, பாவ மன்னிப்புக்காக ஞானஸ்நானம் பெற்றிருக்கிறார்கள். அவர்களை கர்த்தர் தமது சபையில் சேர்த்தார் (அப்போஸ்தலர் 2:38, 41,47) அவர்கள் என்ன செய்தார்களோ, அதையே நீங்களும் செய்தால் தேவன் உங்களை அவருடைய சபையில் சேர்ப்பார்.

**J.C. சோட்** J.C. Choate

பெண்கள் பகுதி

# கிறிஸ்தவப் பெண்ணின் ஆவிக்குரிய நிலை

ஒரு கிறிஸ்தவப் பெண்ணின் வாழ்க்கையானது, அவள் பிறருக்கு செய்யும் சேவையின் மூலம் அறியப்படுகிறது. இது ஒரு நல்ல காரியம் ஏனென்றால் இயற்கையாகவே இவள், மற்றவர்களுடைய தேவைகளை உணர்ந்து கொள்ளக்கூடிய உள்ளுணர்வுகளைப் பெற்றிருக்கிறாள். பிறருடைய தேவைகளுக்காக தன்னை அர்ப்பணிக்கும் முன், முதலாவது தனக்குள் சென்று தன்னை யார் என்று அவள் பார்த்துக் கொள்ள வேண்டும். ஒருவேளை சரியான மனப்பான்மையோடு இவள் பிறருக்கு உதவவில்லை யென்றால், அதற்காக அவள் செலவிடும் நேரமும், பிரயாசங்களும் தேவனுக்கென்றும், அவருடைய ராஜ்யமாகிய சபைக்கென்றும் செய்யப்படும் ஒன்றாக இல்லாமல், அவளுக்கு அது எரிச்சலையும், எரிச்சலோடும், கோபத்தோடும் செய்யப்படும் ஒன்றாக அவளுக்கு இருக்கும். அவளுடைய ஆவிக்குரிய நிலை தேவனோடு சேர்ந்து ஒத்துப் போகக்கூடியதாக இருக்கும்பட்சத்தில் மிகவும் சுலபமாக வெளிப்புறக் காரியங்களை அவள் நடைமுறைப்படுத்திக் கொள்ளமுடியும். இதை அங்கீகரிக்கும் விதமாக ஞானி சாலமோனின் நீதி மொழிகளில் நாம் வாசிக்கும்போது, "**அவன் இருதயத்தின் நினைவு எப்படியோ, அப்படியோ அவன் இருக்கிறான்; புசியும், பானம்பண்ணும் என்று அவன் உன்னோடே சொன்னாலும், அவன் இருதயம் உன்னோடே இராது**" (நீதி : 23:7) என்று பார்க்கிறோம்.

ஒரு பெண் அன்றாடம் - பிறருக்கு செய்யும் உதவியை, ஒரு கூஜாவில் இருக்கும் தண்ணீரை ஒரு டம்ளரில் ஊற்றும் செயலுக்கு ஒப்பிட்டுக் கூறலாம். மற்றவரின் ஆவிக்குரிய தேவைகளுக்காக தன்னை கொடுக்கும் ஒவ்வொரு முறையும், தன்னுடைய சொந்த கூஜாவில் பற்றாக்குறையை ஏற்படுத்துகிறாள். உடனே அந்த காலி இடத்தை அவள் நிரப்பிக் கொள்ளவில்லையென்றால், ஆவிக்குரிய வெற்றிடம் ஏற்பட்டுவிடும். ஆவிக்குரிய காரியங்களில் தன் நிலையை ஆழப்படுத்திக் கொள்வது ஒரு கிறிஸ்தவப் பெண் தொடர்ந்து செய்ய வேண்டிய முக்கிய வேலையாகும்.

## ஆவிக்குரிய நிலை என்றால் என்ன?

பொதுவாக நாம் அனைவருமே தேறின ஆவிக்குரியவர்களாக இருக்க வேண்டும் என்று விரும்புவோம். சிந்தனையிலும், போதனையிலும், வாழ்க்கையிலும், தோற்றத்திலும் ஆவிக்குரிய குணத்தை பிரதிபலிப்பது என்று கூறலாம். இன்னும், மாம்சத்தின் உடமைகளுக்கு அதிக முக்கியம் கொடுக்காமல் ஆவிக்குரிய அதாவது தேவனுக்கடுத்த காரியங்களுக்கு அதிக முக்கியத்துவம் கொடுப்பது என்றும் வரையறுக்கலாம் வேதாகமம் இதற்கு என்ன விளக்கம் கொடுக்கிறதென்று பார்க்கலாம்.

**அன்றியும் மாம்சத்தின்படி நடக்கிறவர்கள் மாம்சத்துக்குரியவைகளைச் சிந்திக்கிறார்கள்.**

"**மாம்ச சிந்தை மரணம். ஆவியின் சிந்தையோ ஜீவனும் சமாதானமுமாம்**" (ரோமர் : 8:5,6) இரண்டு வேறுபட்ட காரியங்கள் நம்மை சுற்றி வருகிறது. ஒன்று நம்முடைய ஆன்மா அடுத்தது சரீரம் சரீரத்திற்கு அதிக முக்கியத்துவம் கொடுத்தால் மாம்ச சிந்தை நம்மை சுற்றிக் கொள்ளும். அதை விடுத்து நம்முடைய ஆத்துமா, பிறருடைய ஆத்துமா, தேவனுக்கடுத்த காரியங்கள் இவைகளுக்கு முன்னுரிமை கொடுக்கும் போது ஆவிக்குரிய நிலையை எய்த வாய்ப்பு ஏற்படுகிறது.

சரி, இந்த ஆவிக்குரிய நிலையை நாம் அடைய நம்மை எவ்வாறு தயார்படுத்துவது என்பது பற்றி மூன்று தலைப்புகளின் கீழே ஆராய்ந்து பார்ப்போம்.

## I சரியான சமநிலையில் நம்மை வைத்துக்கொள்வது :-

உலகத்திலே வாழ்ந்து கொண்டிருக்கிற நாம் ஆவிக்குரிய வாழ்க்கையை மேற்கொள்ள ஏதோ துறவியாக மாறவேண்டும் என்று தேவன் எதிர்பார்க்கவில்லை. அது அவருடைய விருப்பமும் அல்ல. உலக காரியங்களுக்கும் நேரத்தை ஒதுக்குதல் அவசியம். நீதி. 31ம் அதிகாரத்தில் பார்க்கும் **குணசாலியான ஸ்திரீ** வீட்டுக் காரியங்களை கவனித்து சோம்பலின் அப்பத்தை புசியாமலும் இருந்தாள் என்று வாசிக்கிறோம். அதுதான் சமயம் என்று வீடு, சரீரத் தேவைகள், பிள்ளைகள்பாடு, உறவுகளை மேம்படுத்துதல் என்று அதற்கே ஓயாமல் அலைந்து நேரத்தை செலவழித்து **மார்த்தாளைப்** போன்று உலக காரியங்களுக்காகவே கவலைப்பட்டுக் கொண்டிருக்கக்கூடாது. தன் செயலை நியாயப்படுத்த முயன்ற மார்த்தாள் இயேசுவையே கேள்வி கேட்கிறாள். **என் சகோதரி** என்னை **விட்டு வந்திருக்கிறதைக்குறித்து உமக்கு கவலையில்லையா?** என்கிறாள். (லூக்கா 10:40). இயேசுவின் நிதானமான, ஆனால் கருத்தாழமிக்க

பதில் என்னவென்றால் "**தேவையானது ஒன்றே, மரியாள் தன்னை விட்டெடுபடாத நல்ல பங்கைத் தெரிந்து கொண்டாள்**" என்றார் (லூக் :10:42). அதிக நேரத்தை செலவு செய்து செய்யும் உலகக் காரியங்கள் நம்மை விட்டு எடுபட்டுப் போய் விடும். ஆவிக்குரிய செயல்கள் மட்டும் தான் என்றும் நிலைத்திருக்கும். மார்த்தாள் செய்கையில் தவறேதுமில்லை. விருந்தோம்பல் ஒரு பெண்ணுக்கே உண்டான நல்ல குணம்தான். ஆனால் அதுவே அவளை மேற்கொண்டு ஆவிக்குரிய காரியத்துக்கு நேரத்தை ஒதுக்க மனமில்லாமல் செய்துவிட்டது.

விதைக்கிறவன் உவமையில் மூன்றாவது வகையான விதையைப் பற்றிப் பார்க்கும்போது அது பிரச்சனையில்லாமல் நன்றாகவே வளர்ந்தது. அதை சுற்றிலுமிருக்கிற முள் வளர்ந்து அதை நெருக்கிப் போட்டது. பல சமயங்களில் நம்முடைய சொந்த முட்களான உலகக் கவலை, ஐசுவரியத்தின் மயக்கம் இவைகள் ஆவிக்குரிய வளர்ச்சியை நசுக்கிப் போடுகின்றன. (மத்தேயு : 13:22) நல்லவைகள், சிறந்தவைகள் ஆகிய இரண்டுக்குமுள்ள வேறுபாட்டை உணர்ந்து சிறந்ததான ஆவிக்குரிய காரியங்களை "**ஆம்**" என்று ஏற்றுக்கொண்டு உலகக் காரியங்கள் என்று வரும்போது "**இல்லை**" என்ற சொல்லை பயன்படுத்த கற்றுக்கொள்ள வேண்டும். தனிப்பட்ட வேத வாசிப்பு, தியானம், ஜெபம், ஆராதனை, வேதபாட வகுப்பு இவைகளில் நம்மை ஈடுபடுத்தும்போது ஆவிக்குரிய வகையில் வளர முடியும்.

## II நேரத்தை கண்டுபிடித்து ஒதுக்குவது:-

பொதுவாக நாம் அனைவருமே ஆவிக்குரிய காரியங்களில் வளர்ந்து மேம்பாடடைய விரும்புவோம். உலகக் காரியங்களோ நம்மை விடாமல் தாக்கி நம்முடைய கவனத்தை சிதறடிக்கச் செய்யும். இதை ஜாக்கிரதையாய் மேற்கொண்டு நம்மை ஆவிக்குரியவர்களாக காத்துக்கொள்ள வேண்டும். அப்போஸ்தலனாகிய பவுல் தெசலோனிக்கே பட்டணத்து கிறிஸ்தவர்களுக்கு கூறும்போது "**இடைவிடாமல் ஜெபம் பண்ணுங்கள்**" (Iதெச. 5:17) என்று சொன்னதுபோல நம்முடைய வேலைகளினூடே நேரத்தை கண்டுபிடித்து ஜெபித்துக் கொண்டேயிருக்க வேண்டும். ஓயாமல் ஜெபம் பண்ணும் பழக்கத்தை தானியேல் கொண்டிருந்தான். "**தானியேலோ வென்றால் ......... தன் வீட்டுக்குள்ளேபோய், தன்மேல் அறையிலே எருசலேமுக்கு நேராக பலகணிகள் திறந்திருக்க, அங்கே தான் முன்செய்து வந்தபடியே, தினம் மூன்று வேளையும் தன் தேவனுக்கு முன்பாக முழங்காற்படியிட்டு ஜெபம்பண்ணி, ஸ்தோத்திரம் செலுத்தினான். (தானி : 6:10).**

தன்னை பின்பற்றினவர்களுக்கு இயேசு கிறிஸ்து ஒரு மாதிரி ஜெபம் செய்து காட்டினார். (மத். 6:9-13) அந்த ஜெபம் ஏழு பாகங்களை கொண்டுள்ளது.

<u>1. துதித்தல் :-</u> **"பரமண்டலங்களிலிருக்கிற எங்கள் பிதாவே, உம்முடைய நாமம் பரிசுத்தப்படுவதாக"**. அநேக சமயங்களில் நாம் தேவனை துதிக்க மறந்துவிடுகிறோம். நாம் அற்ப மனுஷர்களாயிருப்பதால் தேவாதி தேவனின் மகத்துவத்தை உணர்ந்து கொண்டு, அவருடைய மகத்துவம் பற்றிய வசனப்பகுதிகளை படித்து ஜெபத்தில் அவற்றை பயன்படுத்தி அவரை துதிக்க வேண்டும்.

<u>2. சபை :-</u> **"உம்முடைய இராஜ்யம் வருவதாக"** இயேசு கிறிஸ்து இந்த மாதிரி ஜெபத்தை கற்றுக்கொடுக்கும்போது இராஜ்யமாகிய சபை ஸ்தாபிக்கப்படாமல் இருந்தது. பெந்தெகொஸ்தே நாளில் சபை ஸ்தாபிக்கப்பட்ட பின்பு இந்த மாதிரி வார்த்தையை நாம் உபயோகப்படுத்த வேண்டிய அவசியம் இல்லை. கிறிஸ்துவின் மணவாட்டியாகிய சபைக்காகவும், சபையின் வேலைகள், சபையை வழி நடத்துகிறவர்கள், சபையின் தேவைகள், சபையின் வளர்ச்சி சபையின் மூப்பர்கள், டீக்கன்கள் ஆகியவற்றிற்காக ஜெபிக்கலாம்.

<u>3. அவருடைய சித்தத்துக்கு கீழ்ப்படிவது:-</u> **"உம்முடைய சித்தம் பரமண்டலத்திலே செய்யப்படுகிறதுபோல பூமியிலேயும் செய்யப் படுவதாக"** மனிதர்களாகிய நமக்கு சில சமயங்களில் முற்றிலுமாக பிதாவின் சித்தத்துக்கு ஒப்புக்கொடுப்பதில் பிரச்சினை இருந்து கொண்டேயுள்ளது. முற்றிலும் அவர் சித்தம் செய்யாத பாத்திரமாக நாம் இருக்கும்பட்சத்தில் அவருக்கு முழுமையான மகிமையை கொடுக்கிறவர் களாக நாம் காணப்படமாட்டோம்.

<u>4. "எங்களுக்கு வேண்டிய ஆகாரத்தை எங்களுக்குத் தாரும்:-"</u>

இங்கே கவனிக்க வேண்டியது என்னவென்றால், இயேசுவானவர், தன் சீடர்களிடம் அவர்களுக்கு வேண்டிய உணவை ஒரு மாதத்திற்கோ, அல்லது ஒரு வருடம் முடியுமட்டோ கொடுக்கும்படி ஜெபிக்கச் சொல்லவில்லை. மாறாக, அன்றாடத் தேவைக்கு மட்டும் கேட்டு ஜெபிக்கச் சொல்கிறார். அநேகராகிய நாம் அளவுக்கதிமாக ஆசீர்வாதங்களை பெற்றிருக்கிறோம். அதற்காக அவருக்கு கோடான கோடி நன்றிகளை ஏறெடுத்துக் கொண்டேயிருக்க வேண்டும்.

<u>5. மன்னிப்பு:-</u> **"எங்கள் கடனாளிகளுக்கு நாங்கள் மன்னிக்கிறது போல எங்கள் கடன்களை எங்களுக்கு மன்னியும்"**. ஒரு கிறிஸ்தவன் தான் செய்த தவறை அறிக்கை செய்தாலொழிய மன்னிப்பை பெறமுடியாது. நமக்கு விரோதமாய் தவறு செய்தவர்களையும் மன்னிக்க வேண்டும். மன்னிக்கும் இருதயம் மிக, மிக முக்கியம்.

**6. பலவீனங்களில் உதவி :-** **"எங்களை சோதனைக்குட்படப் பண்ணாமல், தீமையினின்று எங்களை இரட்சித்துக் கொள்ளும்."** சாத்தானுடைய வலையில் விழத்தள்ளக் கூடிய பலவித பலவீனங்களை நாம் கொண்டிருக்கிறோம். எனவே தேவனுடைய உதவிக்காக ஜெபிக்கும்போது குறிப்பாக பலவீனங்களை சொல்லி, பெலனுக்காக ஜெபிக்கவேண்டும்.

**7. துதித்தல் :-** **ராஜ்யமும், வல்லமையும், மகிமையும் என்றென்றைக்கும் உம்முடையவைகளே**

இயேசுவின் மாதிரி ஜெபம் துவக்கமும், முடிவும் துதித்தலைக் கொண்டுள்ளது. எவ்வளவு சமயங்களில் நாம் அவரை துதிக்கமால் விட்டுவிடுகிறோம்.

இதோடு நிறுத்திக் கொள்ளாமல் கிறிஸ்தவப் பெண்களாகிய நமக்கு இன்னும் ஜெபிப்பதற்கு பல காரியங்கள் உண்டு. உதவியில் இருப்போர், வியாதியாய் இருப்போர் என்று பட்டியலிடலாம். அதிகாலையில் வேலை செய்யும்போது அவரை துதிக்கலாம். பகல் வேளையில் வேலைகளுக் கிடையே சபைக்காகாவும் ஜெபிக்கச் சொல்லி கேட்டவர் களுக்காகவும் ஜெபிக்கலாம். மன்னிப்பு கேட்டு இடைவிடாமல் ஜெபிக்கலாம். இரவு படுக்கும் முன் ஜெபிக்கலாம். என்று காத்திருக்க வேண்டிய அவசியமில்லை. இப்படியாக இடைவிடாமல் ஜெபிக்க கற்றுக் கொள்ள வேண்டும். முழங்காலில் நின்று ஜெபித்தால் மிகவும் நல்லது. மனதை ஜெபத்தோடு ஒன்றிப்போகச் செய்வதற்கு முழங்காலில் நிற்பதை விட சிறந்த வழி வேறு எதுவும் இல்லை. தம்முடைய பிள்ளைகளின் ஜெபத்திற்கு பதில் கொடுக்கிறவர் நம் தேவன், சில சமயங்களில் "ஆம்" என்று பதில் கொடுக்கிறார். மற்றொரு சமயத்தில் "இல்லை" என்று பதில் கொடுக்கிறார். சில சமயங்களில் "இந்த நேரத்திற்கு இது அவசியமில்லை" என்றும் இருக்கும். நம்முடைய ஜெபத்திற்கு பதில் எத்தன்மையது என்று எப்படி தெரிந்து கொள்ளப்போகிறோம். அருமையானவர்களே, வேத வசனங்களின் மூலமாக நமக்கு நம் தேவன் பதில் சொல்கிறவரா யிருக்கிறார். எனவே வேதத்தை படித்து, தியானிப்பது அவசியம். வேதத்தை படித்து ஆராய்ந்து ஆவிக்குரிய நிலையில் நம்மை மேம்படுத்திக் கொள்வது பற்றி கர்த்தருக்குச் சித்தமானால் அடுத்த மாதம் படிக்கலாம்.

**ரேச்சல் ராஜநாயகம்**

வாலிபர் பகுதி

# அதைச் செய்யாதிருந்தார்

சோதனை தாண்டி சாதனை புரிய வேண்டுமென்ற எண்ணம் எல்லா மனுஷனுக்கும் எழுவதில்லை, சிலவேளையில் எவரெஸ்ட் சிகரத்தை பல சிரமங்களோடாவது எட்டிவிடுவேன் என சூளுரைக்கும் அசாதாரண மனிதனும் தன் கட்டுப்பாட்டுக்குள் இல்லாத பல காரணங்களினிமித்தம் அதை எட்டுவது எட்டா கனியாக கிட்டாமல் போய்விடுவதை நாம் கண் கூடாக பார்க்கிறோம். மண்ணான மனிதன் எல்லாவற்றையும் தன் கட்டுப்பாட்டுக்குள் வைத்துக்கொள்ள முடியாதென்பது வையகம் அறிந்த விஷயம். ஆனால், அண்ட சராசரங்களையும் தனது வார்த்தையின் வல்லமையால் சிருஷ்டித்த அநாதி தேவனால், எதை வேண்டுமானாலும், எந்த சூழ்நிலையிலும் சொன்னது சொன்னபடி, இம்மியும் பிசகாமல், கணகச்சிதமாய் செய்து முடிக்க முடியும் என்பதை மானுடம் முதல் அறிந்து கொள்வது சாலச் சிறந்ததாகும்.

எகிப்தின் அடிமை சங்கிலி முறிபட்டு, இஸ்ரவேலர்கள் விடுதலை கீதம் முழங்கி கானான் நோக்கி யாத்திரை செய்து கொண்டிருந்த போது, மோவாபின் கோமகனாகிய பாலாக், இஸ்ரவேலரை சபிக்கும்படி அழைத்து வந்த பிலேயாம் சொல்லும் வார்த்தைகளை கவனியுங்கள், "**பொய் சொல்ல தேவன் ஒரு மனிதன் அல்ல; அவர் சொல்லியும் செய்யாதிருப்பாரா? அவர் வசனித்தும் நிறைவேற்றாதிருப்பாரா?**" (எண். 23:19) என்று வினவுகிறான். இக்கேள்விக்குப் பதில் அக்கேள்வியிலேயே "இல்லை" என்றிருந்தாலும். ஒரு சமயம் தன் தாசன் மூலமாய் சொல்லியதை அவர் செய்யாதிருந்தார் என்பதை நாம் அறிந்து, அது ஏன் என்பதை புரிந்து அதின்படி நடக்க வேண்டும் என்பதால் இம்மாதம் இம்முயற்சி செய்கிறேன். படித்து இதயத்தில் பதித்திடுக.

## புறா பறந்து வருகிறது

வாக்குமாறாத தேவனின் துணையுடன் இஸ்ரவேல் ஜனம் வாக்குத்தத்த தேசமாகிய கானானுக்குள் குடியேறியது தேவன் அவர்களை நியாயாதிபதிகளை கொண்டு ஆட்சி செய்தார். ஆனால் அவர்களோ சுற்றி இருக்கும் தேசங்களை பார்த்து அதைப் போலவே தங்களுக்கும்

கொற்றவன் வேண்டுமென்ற கோரிக்கையை வைத்தனார். கோவன் கொடியவனாக இருப்பான் என்ற எச்சரிப்பும் கொடுக்கப்பட்டது, ஆகிலும் விவரம் அரியா சிறுபிள்ளையைப் போல் அடம்பிடித்ததால், தகப்பனின் கழுதையை தேடிப்போன சவுல் முதல் அரியாசனம் கண்டான், அவனுக்குப் பின் தேவனுடைய இதயத்துக்கேற்ற தாசன் தாவீது, பின்பு அவன் மகன் சாலொமோன், இவனுக்குப் பின்பு ராஜ்யம் இரண்டாக பிளவுபட்டது.

யூதா, பென்யமீன் என்னும் இரண்டு கோத்திரம் தெற்கு ராஜ்யம் என்றும், மற்ற பத்து கோத்திரங்கள் இஸ்ரவேல் அல்லது வடக்கு ராஜ்யம் என்றும் அழைக்கப்பட்டது. இஸ்ரவேல் ஜனம் பாவம் செய்யும் போதெல்லாம் தேவன் தீர்க்கத்தரிசிகளை எழுப்பி அவர்களை எச்சரித்து வந்தார். அக்காலத்திலே மிகவும் பிரசித்தி பெற்ற பட்டணமாகிய நினிவே ஒரு புறஜாதி பட்டணமாயிருந்து அதிகமான அக்கிரமம் செய்து கொண்டு வந்ததால் தேவன் "யோனா" என்னும் தீர்க்கனை அங்கு போகும்படி சொல்கிறார். ஆனால் அவனோ வேறு திசையில் ஓடுகிறான், அவன் அப்படி கப்பலேறி கடல் பயணம் செய்கையில் கடும் புயலினால் வாரிதி பொங்குகிறது. ஆழி கப்பலை அலைக்கழிக்க காரணம் யார் எனக் கண்டறிய சீட்டுப்போடப்படுகிறது. சீட்டு, வேறு திசையாய்ப் போன "யோனா"வின் பெயருக்கு விழுகிறது. அவனை கடலில் எறிகிறார்கள். ஒரு பெரிய மீன் அவனை விழுங்குகிறது.

யோனா மீனின் வயிற்றில் இருந்து மனமுருகி தன் தவறை நினைத்து வருந்தி, திருந்தி மன்றாடுகிறான். அவனை கரையில் கக்கும்படி மீனுக்கு கட்டளையிடுகிறார் தேவன். இப்பொழுது அவன் நினிவே என்னும் பட்டணத்திற்கு வந்து "இன்னும் நாற்பது நாள் உண்டு, அப்பொழுது நினிவே கவிழ்க்கப்பட்டுப்போம் என்று கூறினான்" (யோனா 3:4) இப்படி அவன் பிரசங்கித்த செய்தியை நினிவேயின் மக்கள் கேட்டு, தாங்கள் மாக்களாக இருந்ததற்காக வருந்தி, தேவனை விசுவாசித்து உபவாசம் இருந்தார்கள். **அது மட்டுமா எனக்கன்பானவர்களே "புறா" என்று அர்த்தம் கொண்ட யோனாவின் மூலம் பறந்து வந்த தேவ எச்சரிப்பைக் கேட்டு அனைவரும் இரட்டுடுத்திக் கொண்டார்கள்** (யோனா 3:4)

நினிவே நகரத்து அரசன், இதை கேள்விபட்ட போது என்ன செய்தான் என்பதை எண்ணிப்பார்க்கையில் வியப்பாயிருக்கிறது. அப்படி அவன் செய்ததென்ன என நீங்கள் கேட்கும் சத்தம் என் செவிக்கெட்டுகிறது. அவன் தன் சிங்காசனத்தை விட்டு எழுந்தான், தான் உடுத்தியிருந்த உடுப்பை கழற்றி விட்டு தானும், தன் மக்களைப் போலவே இரட்டை உடுத்தி, சாம்பலில் உட்கார்ந்தான் அவன் செய்ததை உற்றுப் பாருங்கள், மக்கள் நீங்கள் செய்தது போல நான் செய்ய வேண்டியதில்லை, நான்

அரசன். அதுவும் அவன் அரசனாயிருந்த நகரத்தைப் பற்றி வேதம் விளம்புகையில், "நினிவே மூன்று நாள் பிரயாண விஸ்தாரமான மகா பெரிய நகரமாயிருக்கிறது" என்கிறது.

வேதம் அதை **"மகா பெரிய நகரம்"** என்கிறது. அப்படிப்பட்ட நகரத்திற்கு அரசனாயிருந்த அவன், நான் அரசனாயிற்றே, நான் சிங்காசனம் விட்டெழுவதா? அரச உடைகளை கலைந்து, இரட்டுடுத்துவதா? அதுவெல்லாம் அரசனுக்குப் பொருந்தாத செயல் என்றோ, மகா நகரத்து அரசன் நான் என் மகிமையை விட்டுக்கொடுக்கவெல்லாம் முடியாது என்றோ மார்தட்டி கூறவில்லை, மாறாக அகிலத்தை ஆளுகிற ஆண்டவர் முன் தன்னைத் தாழ்த்தினான். அத்தோடு அவன் நிறுத்திக்கொண்டானா? என்றால் இல்லை, "மேலும் ராஜா, தானும் தன் பிரதானிகளும் நிர்ணயம் பண்ணின கட்டளையாக, நினிவேயிலெங்கும் மனுஷரும் மிருகங்களும், மாடுகளும், ஆடுகளும் ஒன்றும் ருசிபாராதிருக்கவும், மேயாமலும், தண்ணீர் குடியாமலும் இருக்கவும், மனுஷரும் மிருகங்களும் இரட்டினால் மூடிக்கொண்டு தேவனை நோக்கி உரத்த சத்தமாய்க் கூப்பிடவும், அவரவர் தம்தம் பொல்லாத வழியையும் தம்தம் கைகளிலுள்ள கொடுமையையும் விட்டுத் திரும்பவுங்கடவர்கள் ....." (யோனா 3:7,8) என்று கூறச் சொன்னான்.

எனக்கன்பான வாலிபர்களே, இதுவல்லவோ மனந்திரும்புதல், அரசன் முதல், ஆண்டிவரை அனைவரும் இறைவனுக்கு செவிமடுத்திக்கிறார்கள். தேவனை நோக்கி ஜெபித்து, பொல்லாத வழிகளை விட்டு பரலோகத்தின் தேவனிடத்திற்கு திரும்பினார்கள். பரலோகத்தின் தேவன், "அவர்கள் தங்கள் பொல்லாத வழியைவிட்டுத் திரும்பினார் களென்று தேவன் அவர்களுடைய **கிரியைகளை** பார்த்து, தாம் அவர்களுக்குச் செய்வேன் என்று சொல்லியிருந்த தீங்கைக் குறித்து மனஸ்தாபப்பட்டு, **அதைச் செய்யாதிருந்தார்**".

நம்முடைய தேவன், நமது கிரியைகளை பார்க்கிறார், அதற்கு தக்க பலனையும் அவர் தருகிறார். ஆகவே, வாலிபர்களே, நாம் நம்முடைய வாழ்வில் தேவனுக்கு ஏற்ற கிரியைகளை செய்வோம். அவர் நிச்சயம் நம்முடைய மனந்திரும்புதலை பார்த்து மனதுருகுவார். நாம் தேவனை நோக்கி ஜெபித்து, பொல்லாத வழிகளை விட்டுத் திரும்பி, அவருடை குமாரன் மீது விசுவாசம் வைத்து, பாவ மன்னிப்புக்காக ஞானஸ்நானம் பெற்று, முடிவு பரியந்தம் அவருடைய சபையில் நிலைத்திருந்தால் நியாயத்தீர்ப்பு நாளில் நாம் ஆக்கினைக்கு தப்புவோம். அப்படி செய்வதற்கு, தேவன் உதவி செய்வாராக! ஆமென்.

**ஜே. பிக்கின்ஸ்**

சிறுவர் பகுதி

# ஏராளமான டைனோசர்களின் கல்லறைகளும், ஜலப்பிரளயமும்

**எ**னதருமை சிறுதம்பி, தங்கைககளே! உங்கள் யாவருக்கும் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் வாழ்த்துக்கள். இந்த மாதமும் உங்களோடு தொடர்பு கொள்வதில் பெரும் மகிழ்ச்சி அடைகிறேன். மாதந்தோறும் வெளிவரும் பாடங்கள் யாவும் உங்களுக்கு பிரயோஜனமாயிருக்கும் என நம்புகிறேன். இம்மாதம், நாம் டைனோசர்களின் அழிவைப்பற்றி பார்க்கப்போகிறோம். இந்த பாடம் சற்று வித்தியாசமாக இருக்கும் என நம்புகிறேன்.


“டைனோசர்” என்றாலே சிறுபிள்ளைகளாகிய உங்களுக்கு உற்சாகமும், மகிழ்ச்சியும் அத்தோடு பரபரப்பும் காணப்படும். அப்படித்தானே? டைனோசரை பற்றி நீங்கள் பல காரியங்களை அறிந்திருப்பீர்கள். ஆனால், அவை அனைத்தும் உண்மையாகவோ அல்லது பொய்யாகவோ இருக்கலாம். சரி, பொதுவாக நாம் டைனோசரைப் பற்றி பேச்சை எடுக்கும் பொழுது நம் மனதில் நம்மையறியாத ஒரு கேள்வி புரியாத புதிரைப்போல இருந்து கொண்டே இருக்கும். அது என்ன? ஆம், “டைனோசர்களின் மறைவும், அவைகள் புதைந்து கிடக்கும் விதமும் தான்”.

உலகிலுள்ள பல்வேறு இடங்களில் டைனோசர்களின் எலும்புகள் காணப்படுகின்றன. அதைத்தான் நாம் டைனோசர்களின் கல்லறை என்கிறோம். வடதுருவம் துவங்கி, தென்துருவம் வரைக்கும் எல்லா இடங்களிலும் அவைகளைப் பற்றிய தடயம் கிடைத்துள்ளது. ஏழு கண்டங்களிலும் அவை பரவி கிடக்கின்றன. 100 வருடங்களுக்கு முன் ஆப்பிரிக்காவில் டைனோசர்களின் எலும்புகள் “டன்” அளவில் கண்டெடுக்கப்பட்டன. பின்னர் அவை ஜெர்மனியில் பார்வைக்காக அனுப்பி வைக்கப்பட்டது. 300 வகையான பலவிதமான டைனோசர்களின் எலும்பை தற்போது கண்டறிந்துள்ளனர். இப்படி அவைகள் பல இடங்களில் பரவிக்கிடக்கிறது. டைனோசர்கள் பல இடங்களில் புதையுண்டு போக காரணங்கள் புதிது புதிதாகத் தோன்றின. அதற்கு விஞ்ஞானிகளும், ஆராய்ச்சியாளர்களும் பலவித காரணங்களைக் கூறுகின்றனர்.

ஆனால், பெரும்பாலான விஞ்ஞானிகள் “இப்படி பல இடங்களில் எலும்புகள் புதையுண்டு போவதற்கு” **பெரிய அளவில் தண்ணீர்** இருந்திருக்க வேண்டும் என்று கூறுகின்றனர். அதிலும் சில விஞ்ஞானிகள் அவ்வப்போது ஏற்படுகின்ற வெள்ளம் காரணமாக டைனோசர்கள் அழிந்திருக்கும் என கூறுகின்றனர். மேலும் சிலர் “ஆற்றை கடக்க முயற்சி செய்யும் போது அவை தண்ணீரில் மூழ்கி புதைந்து போயின”. என்று

கூறுகின்றனர். ஆனால், இவைகள் சரியான காரணங்களாகத் தெரியவில்லை.

ஏன் தெரியுமா? வெள்ளத்தினாலோ அல்லது ஆற்று நீரினாலோ அவை அழிந்திருந்தால் உலகிலுள்ள பல இடங்களிலும் அவை பரவிக் கிடப்பதற்கு வாய்ப்புகளே இல்லை. நான் முன்னே கூறியபடி அவை உலக முழுவதிலும் பரவிக் கிடக்கின்றன. அப்படியானால் எது உண்மை என்று கேட்கிறீர்களா? தொடர்ந்து படியுங்கள்.



எந்தக் காரியம் நடந்தாலும், அதற்கு ஒரு காரணம் கண்டிப்பாக உண்டு. அதைப் போலவே டைனோசர் அழிவிற்கும் ஒரு காரணம் கண்டிப்பாக உண்டு. அதுதான் "நோவா காலத்தில் ஏற்பட்ட ஜலப்பிரளயம்" (ஆதி. 7:11-23). நீங்கள் அறிந்திருக்கிறபடி ஜலம் பூமியெங்கும் காணப்பட்டது. மலைகள் தண்ணீரில் மூழ்கி மறைகிற அளவிற்கு ஜலம் உயர்ந்து பூமியை நிரப்பிற்று. அப்போது தான் டைனோசர்கள் புதையுண்டு போயிருக்கும் என்று பெரும்பாலான விஞ்ஞானிகள் நம்புகின்றனர். ஆம், அப்போது தான் அவை கண்டிப்பாக அழிந்திருக்க முடியும்.

இப்படி ஏற்பட்ட வெள்ளத்தின் காரணமாகத் தான் பெரிய அளவில் அவை அழிந்து போயிருக்கும். அவைகளின் எலும்புகள் மண்ணில் புதைந்து போயிருக்கும். அவைகளின் எலும்புகள் மண்ணில் புதைந்து போயிருப்பதற்கு ஜலம் தான் காரணமாயிற்று. வட அமெரிக்காவில் உள்ள கனடா நாடு தொடங்கி ஆப்பிரிக்கா நாடு வரை பல இடங்களில் டைனோசர்களின் எலும்புகள் இன்றும் பரவிக்கிடக்கின்றன. நோவா காலத்து ஜலப்பிரளயம் நம்மை பயமடையச் செய்கிறது. நோவா உத்தமனாய் இருந்ததினால், தேவன் அவனையும், அவன் குடும்பத்தையும் பேழையைக் கொண்டு காப்பாற்றினார்.

நம்முடைய தேவன், அவருக்குப் பயப்படுகிறவர்களுக்கு நன்மை செய்கிற தேவனாக இருக்கிறார். ஆபத்தில் உதவி செய்கிறவராக, காப்பாற்றுகிறவராக இருக்கிறார். ஆகவே, அப்படிப்பட்ட தேவனுக்கு நாம் நம் வாழ்வில் பயந்து, அவருடைய கற்பனைகளைக் கைக்கொள்ள வேண்டும். (பிர 12:15)

**ஏபில். R. ரோஜர் நாயகம்**

# II யோவான் ஒரு கண்ணோட்டம்

**ஆசிரியர் : அப்போஸ்தலன் யோவான்**
**காலம் : சுமார் 90 கி.பி.**

## இந்நூல் பற்றி

1. ஒரு கிறிஸ்தவப் பெண்ணுக்கு எழுதப்பட்ட தனிப்பட்ட நிருபம்.
2. புதிய ஏற்பாட்டில் உள்ள மிகச் சிறிய நூல்.
3. அவருடைய பிள்ளைகள் சத்தியத்தில் நடக்கிறவர்கள் என்பது சந்தோஷமானது என்று சொல்லும்படியாகவும் அன்பிலே தொடர்ந்து நடக்கும்படி ஊக்கப்படுத்தும்படியாகவும் (வ. 5,6) கள்ளப் போதகர்கள் பற்றி அவளை எச்சரிக்கும்படியாகவும் எழுதப்பட்டுள்ளது. (7-11).
4. "கிறிஸ்துவால் போதிக்கப்பட்ட உபதேசம்"- கிறிஸ்துவின் உபதேசம் என்று இந்நூல் அழைக்கப்படுகிறது.
5. 13 வசனங்களைக் கொண்ட இந்நூலில் சத்தியம் 5 முறையும், உபதேசம் 3 முறையும் கட்டளை 4 முறையும் பேசப்பட்டுள்ளது.

## இந்நூலின் செய்தி

1. சத்தியம், உபதேசம், கட்டளைகள் ஆகிய எல்லாமே முக்கியமானது.
2. நாம் ஒருவரிலொருவர் அன்பு கூர வேண்டியது அவசியம். (வ.5)
3. நாம் தேவனிடத்தில் காட்டும் அன்பு, நாம் அவருடைய கற்பனைகளின்படி செய்வதில் வெளியாகிறது (வ-6)
4. அன்பும், சத்தியமும் ஒன்றோடொன்று இணைந்து போகக் கூடியதாயிருக்க வேண்டும்.
5. கிறிஸ்தவர்கள் கள்ளப்போதகங்கள் குறித்தும், கள்ளப் போதகர்கள் குறித்தும் எச்சரிக்கையாயிருக்க வேண்டும்.
6. கள்ளப் போதகர்களால் வஞ்சிக்கப்பட வாய்ப்பு அதிகம் உண்டு (வ. 7-11)

# விசுவாசத்தின் அடிப்படைகள்

ஆரோக்கியமான உபதேசம் பற்றி தேவன் என்ன சொல்லியிருக்கிறார் என்பதைக் கொண்டு, அது தேவனுடைய பார்வையில் எவ்வளவு முக்கியமானதாக இருக்கிறதென்பது குறித்து நாம் படித்துக் கொண்டு வருகிறோம். நாம் இதுவரை படித்து சீர்தூக்கிப்பார்த்த வசனப்பகுதிகளிலிருந்து தேவன் எனக்காகவும், உங்களுக்காகவும் என்ன சொல்லுகிறார் என்று தொகுத்துப்பார்ப்போம்.

நாம் வேற்றுமையான உபதேசங்களை போதிக்கக் கூடாது (I தீமோ 1:3) இரண்டு வழிகள் மாத்திரம் உண்டு என்று இயேசு சொல்லியுள்ளார். (மத் 7:13-15) அநேகர் நடக்கக் கூடிய விசாலமான வழி உண்டு. அது, நித்திய அழிவுக்கு வழிநடத்தும். இன்னொரு வழி உண்டு, அது குறுகலானது, அதிலே நடக்கத் தெரிந்து கொள்ளுகிறவர்கள் சிலர். ஆனால், அது நித்திய ஜீவனுக்கு வழிநடத்தும். இயேசு, கள்ளத் தீர்க்கதரிசிகளுக்கு எச்சரிக்கையாயிருங்கள் என்று சொல்லுவதையும் பார்த்தோம்.

கர்த்தாவே, கர்த்தாவே என்று சொல்லுவது மாத்திரம் போதுமானதாகாது (மத். 7:21-23) நியாயத்தீர்ப்பின் நாளில், அவருடைய நாமத்தினாலே, அநேக வல்லமையான காரியங்களைச் செய்தோம் அல்லவா என்று கூறுவார்கள். ஆனால், அவரோ, “நான் உங்களை ஒருக்காலும் அறியேன் என்னை விட்டு அகன்றுபோங்கள்” என்று கூறுவார். இதற்குக் காரணம், அவர்கள் பிதாவின் சித்தத்திற்குக் கீழ்ப்படியாததே.

மனித உபதேசங்களின்படியான கற்பனைகளைக் கொண்டு நாம் செய்யும் ஆராதனை வீண் என்று இரட்சகர் சொல்லியுள்ளார் (மத். 15:8-9) நாம் ஆரோக்கியமான வசனங்களின் சட்டத்தைக் கைக்கொள்ளவேண்டும் (IIதீமோ 1:13) நானும், நீங்களும் தேவனுக்கு முன்பாக உத்தமனாக நிற்கும்படி ஜாக்கிரதையாயிருக்க வேண்டும் (IIதீமோ 2:!5) நாம் சத்திய வசனத்தை நிதானமாய்ப் பகுத்துப் போதிக்கிறவர்களானபடியால், வெட்கப்படாத ஊழியக்காரர்களாயிருக்க வேண்டும்.

நாம் வசனத்தை மாத்திரமே உபதேசிக்க வேண்டும் (IIதீமோ 4:1-4) மூப்பர்கள், உண்மையுள்ள வசனத்தை பற்றிக் கொள்ளுகிறவர்களாயிருக்க வேண்டும் (தீத் 1:9-14) ஆரோக்கியமான உபதேசத்தைக் கொண்டு புத்தி சொல்லவும், எதிர் பேசுகிறவர்களைக் கடிந்து கொண்டு கண்டனம்

செய்கிறவர்களாயிருக்க வேண்டும். பேசக் கூடாதவைகளைப் பேசுகிறவர்களின் வாயை அடக்க வேண்டும். விசுவாசத்தில் பலமுள்ளவர்கள், மனித கற்பனையின்படியான உபதேசத்தைக் கேட்டு, வழிவிலகிப் போய்விடாதபடி, அவர்களை நாம் கடுமையாகக் கடிந்து கொள்ளவேண்டும்.

நாம் ஆரோக்கியமான உபதேசத்தைப் பேச வேண்டும். அதாவது, தவறுகளில்லாத உபதேசம் (தீத்து 2:1) நாம் போதிக்கும் போது, தேவனுடைய வாக்கியங்களின்படியாகப் போதிக்கவேண்டும். (Iபேதுரு 4:11).

இது, அப்படியானால், "ஆரோக்கியமான உபதேசம் என்றால் என்ன?" என்று நாம் பதிலளிக்க வேண்டிய அடுத்த கேள்விக்கு நம்மைக் கொண்டு போய் நிறுத்துகிறது.

Iதீமோ 1:10,11 வசனப் பகுதியில், தேவன் இக்கேள்விக்கு பதிலளிக்கிறார். அங்கே, தேவன் நமக்கு என்ன சொல்லுகிறார் என்று வாசித்துப்பார்ப்போம். ஆரோக்கியமான உபதேசம் என்பது, அப்போஸ்தலன் பவுலுக்கும் மற்றும் ஆவியினால் ஏவப்பட்ட அப்போஸ்தலருக்கும், தீர்க்கதரிசிகளுக்கும் ஒப்புவிக்கப்பட்ட, நித்தியானந்த தேவனுடைய மகிமையான சுவிசேஷம் ஆகும். அந்த சுவிசேஷம், இயேசுவின் புதிய ஏற்பாட்டில் எழுதி கொடுக்கப்பட்டிருக்கிறது.

பிறகு, கள்ள உபதேசத்தின் விளைவுகள் என்ன? என்ற முக்கியமான கேள்வி பற்றி கவனிப்போம். கள்ள உபதேசம் என்பது, கிறிஸ்துவின் சுவிசேஷத்தின்படியாக இராதவைகள் கள்ள உபதேசத்தால் பல பெரிய விளைவுகள் இருக்கும் என்று தேவன் சொல்லுகிறார்

முதலாவது, இது போதிக்கிறவர்களை அழித்துப்போடும். கலா 1:6-9 வசனப்பகுதியில் தேவன் இதை வெளிப்படுத்துகிறார். அங்கே, கிறிஸ்துவின் அப்போஸ்தலனாகிய பவுல் "நாங்களாவது, வானத்திலிருந்து வருகிற ஒரு தூதனாவது, வேறொரு சுவிசேஷத்தை உங்களுக்குப் பிரசங்கித்தால், அவன் சபிக்கப்பட்டவனாயிருக்கக்கடவன்" என்கிறார். சபிக்கப்பட்டவன் என்றால் அருவருப்பானது, தேவனுடைய **அழிவுக்கென்று** தேவனால் நியமிக்கப்பட்டிருக்கிறவன் என்று பொருள். ஆகையால், கள்ள போதகங்களை உபதேசிப்பது தேவனுக்கு அருவருப்பாயிருக்கிறபடியால், அதன் முடிவு அழிவாகவே இருக்கும்.

IIபேதுரு 2:1-ல் கள்ளப்போதகர்களும், கள்ளத்தீர்க்கதரிசிகளும் ஜனங்களுக்குள்ளே இருக்கிறார்கள் என்று தேவன் குறிப்பிடுகின்றார்.

அவர்கள், "..... கேட்டுக்கேதுவான வேதப்புரட்டுகளை தந்திரமாய் நுழையப்பண்ணுகிறார்கள்...." என்கிறார். வேதபுரட்டு என்பது, பிரிவினையை உண்டுபண்ணும் கள்ள உபதேசம் இதில் தன்னை ஈடுபடுத்துகிற ஒரு மனுஷனுக்கோ அல்லது மனுஷிக்கோ என்ன நடக்கும் என்று தேவன் சொல்லுகிறார் என்பதை தயவு செய்து கவனியுங்கள். அவர்கள், "... தங்களுக்குத் தீவிரமான **அழிவை** வருவித்துக் கொள்ளு வார்கள்" என்று, இந்த எச்சரிப்பின் வார்த்தைகள் என்னுடையவைகளல்ல, தேவனுடையவைகள்.

II பேதுரு 3:16-ல் இப்படிப்பட்ட கள்ள உபதேசத்தின் விளைவு எவ்வளவு பயங்கரமானதாயிருக்கும் என்று சொல்லுகிறார். கல்லாதவர்களும், உறுதியில்லாதவர்களும் தங்களுக்குக் **கேடுவரத் தக்கதாக** இவைகளைப் புரட்டுவார்களாம்.

மேலும், II யோவான் 9-ம் வசனத்தில், கிறிஸ்துவின் உபதேசத்திலே நிலைத்திராமல், மீறி நடக்கிற எவனும், தேவனை உடையவனல்ல என்று தெளிவாகச் சொல்லியுள்ளார். நம்மிடத்தில் தேவன் இல்லையானால், நாம் பாவங்களில் மரித்தவர்களாயிருப்போம், பரலோகத்திற்கான நம்பிக்கையும் இருக்காது.

இவ்வசனப்பகுதிகளில், கள்ள உபதேசம் அதை உபதேசிப் பவர்களை அழித்துப்போடும் என்று கூறுகிறார்.

இரண்டாவதாக, கள்ள உபதேசம், அதை விசுவாசிப்பவர்களையும் அழித்துப்போடும் என்பது கடந்த மாதம், மத் 7:21-23-ல் அநேகர் பரலோகத்தில் பிரவேசிக்கமாட்டார்கள் என இயேசு சொல்லியுள்ளார் என படித்தோம். இயேசுவின் நாமத்தில், வல்லமையான காரியங்களைச் செய்தோம் என்று சொல்லுகிறவர்களாக இருந்தாலும், பிதாவின் சித்தத்தின்படி செய்யாததால், அவர்கள் பரலோகத்தை இழந்து போவார்கள். அவர்களெல்லாம், கள்ள உபதேசத்தால் கவரப்பட்டு அதின்படி செய்து வந்தவர்கள்!.

மத். 15:8,9 வனசப்பகுதியையும் கடந்த மாதத்திலே படித்தோம். மற்றவருடைய உபதேசங்களையும், கற்பனைகளையும் நாம் பின்பற்றினால், அது நம்முடைய ஆராதனையை வீணானதாக்கி விடும் என்று கூறுகிறார் மேலுமாக அதே அதிகாரம் வசனங்கள் 13-14-ல், இயேசு இன்னொரு முக்கியக் கருத்தையும் வெளிப்படுத்தியுள்ளார். கள்ள உபதேசத்தை போதிப்பவர்கள் பற்றிப் பேசும் அச்சந்தர்ப்பத்தில் அப்படி போதிக்கிற கூட்டத்தார்களை பரம பிதா நடாத நாற்று என்று கூறுகிறார்.

அப்படிப் போதிக்கிறவர்களுக்கெல்லாம் என்ன நடக்கும் என்று வசனம் 13-ல் இயேசு சொன்னார். அவர்கள் வேரோடே பிடுங்கப்படுவார்கள். அதாவது, மார்க்கப் பிரிவினைச் சபைகளில் இருக்கும் அம்மக்கள் ஆவிக்குரிய ரீதியில் மரித்துப்போவார்கள்.

தயவு செய்து மத். 15:14 யும் கவனியுங்கள். அந்த பிரிவினைச் சபையாரின் தலைவர்களை குருடரான வழிகாட்டிகள் என்றும், அவர்களைப் பின்பற்றுகிறவர்களைக் குருடர்கள் என்றும் அடையாளம் காட்டுகிறார். அந்தக் குருடரான வழிகாட்டிகளுக்கும் அவர்களைப் பின்பற்றுகிறவர்களுக்கும் என்ன நடக்கும் என்று இரட்சகர் சொல்லியுள்ளார். இருவரும் குழியில் விழுவார்கள். அதாவது, அவர்கள் இருசாராரும், தங்கள் நித்தியத்தை, தேவனைவிட்டுப் பிரிந்தவர்களாகவே கழிப்பார்கள். அது வேதனையான ஒன்று, ஆனாலும் உண்மையானது.

II தெச 2:10-12 வசனப்பகுதியில், கள்ள உபதேசத்தை விசுவாசிப்பதால் ஏற்படும் பயங்கர விளைவுகள் என்ன என்று பட்டியலிடுகிறார். அங்கே இரட்சிக்கப்படமால் அழிந்து போகிறவர்கள் குறித்தும். ஆக்கினைக்குள்ளாக தீர்க்கப்படுகிறவர்கள் குறித்தும் விவரிக்கிறார். ஏன்? ஒரு காரணம், அவர்கள் சத்தியத்தின் மேலுள்ள அன்பை அங்கீகரியாதவர்கள். இன்னொரு காரணம், சத்தியத்தை விசுவாசியாதவர்கள், மூன்றாவது காரணம், அநீதியில் பிரியப்படுகிறவர்கள்.

II பேதுரு 3:17-ல் தேவன் எனக்கும் உங்களுக்கும் ஒரு பலமான எச்சரிப்பைக் கொடுக்கிறார். நம்முடைய உறுதியிலிருந்து விழுந்து போகாமல் நாம் எச்சரிப்பாக இருக்க வேண்டுமென்று கூறுகிறார். நமக்கு ஏற்படக்கூடிய ஒரு வழி என்ன? நாம் அக்கிரமக்காரருடைய வஞ்சகத்திலே இழுப்புண்டு, நம்முடைய உறுதியிலிருந்து விழுந்து போக முடியும் !

இவ்வசனம் இடம் பெற்றிருக்கும் பகுதி என்ன? நாம் வசனம் 16-ல் கண்டபடி, தேவன் தங்கள் அழிவுக்கென்று வேத வசனங்களைப் புரட்டுகிறவர்கள் குறித்து பேசிக் கொண்டிருந்தார். ஆனால், வசனம் 17-ல் நாம் கள்ள உபதேசங்களைப் பின்பற்ற முடிவு எடுத்தால், நாம் வஞ்சகருடைய வழியில் இழுப்புண்டு நம்முடைய உறுதியிலிருந்து விழுந்து போவோம் என்று கூறுகிறார்.

ஆகையால், கள்ள உபதேசம், அதைப் போதிக்கிறவர்களை மாத்திரம் அழிக்காமல், அதை விசுவாசிப்பவர்களையும் அதற்குக் கீழ்ப்படிகிறவர்களையும் அழித்துப்போடுகிறது.

மூன்றாவதாக, கிறிஸ்துவைப் பின்பற்றுகிறோம் என்பவர்களிடம், கள்ள உபதேசம் பிரிவினையை உண்டாக்குகிறது. Iகொரி 10:10-13 வசனப்பகுதியை தயவு செய்து கவனமாய் வாசியுங்கள். கிறிஸ்துவின் அப்போஸ்தலனாகிய பவுல், கொரிந்து சபையிலே கடுமையான பிரச்சனையைக் கண்டறிந்தார். அங்கே, வாக்குவாதமும், சண்டையும் இருந்தது. அங்கிருந்த கிறிஸ்தவர்கள் குழுக்களாகப் பிரிந்து, பவுல், பேதுரு மற்றும் அப்பொல்லோ போன்ற மனிதர்களைப் பின்பற்றுவதாகச் சொல்லிக் கொண்டார்கள்.

அப்போஸ்தலன் பவுலைக் கொண்டு தேவன் அவர்களைக் கண்டனம் பண்ணி பல கேள்விகளைக் கேட்டார். கிறிஸ்து பிரிந்திருக் கிறார? பவுலா உங்களுக்காக சிலுவையிலறையப் பட்டான்? பவுலா அல்லது பவுலின் நாமத்தினாலா ஞானஸ்நானம் பெற்றீர்கள்?

அவர்களுக்குள்ளிருந்த பிரிவினைகளைத் தவிர்க்கும்படியும், அதை எடுத்துப்போடும்படியும், தெய்வீகத் தீர்வை தேவன் தந்தார். நாமனைவரும் ஒரே காரியத்தைப் பேசவேண்டும். நாமனைவரும் ஏகமனதும், ஏக யோசனையும் உள்ளவர்களாய் சீர்பொருந்தியிருக்க வேண்டும்.

நாம் அதை எப்படிச் செய்ய முடியும்? நாம், கிறிஸ்துவின் புதிய ஏற்பாட்டிலிருந்து ஒன்றையும் கூட்டவும், குறைக்கவும் செய்யாமல் ஒரே உபதேசத்தைப் போதிக்க வேண்டும். அந்த ஒரு உபதேசம் நம்மை ஒன்றாக்குகிறது. கள்ள உபதேசம் நம்மைப் பிரிக்கிறது.

ஆகையால், கள்ள உபதேசம் கள்ளப் போதகர்களை அழிக்கிறது என்று கூறுகிறார். அவனோ (அ) அவளோ சபிக்கப்பட்டவர் களாயிருப்பார்கள் (கலா 1:6-9) அது அழித்துப் போடும் (IIபேதுரு 2:1; IIபேதுரு 3:16) அவர்கள் தேவனை உடையவர்களல்ல (IIயோவான்9)

கள்ள உபதேசம் அதை விசுவாசிப்பவர்களையும், அழித்துப்போடுகிறது அவர்கள் பரலோகத்தில் பிரவேசிக்க முடியாது (மத். 7.21-23) அவர்கள் வேரோடே பிடுங்கப்படுவார்கள் மற்றும் குழியிலே விழுவார்கள் (மத். 15:13-14) அவர்கள் ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப் பட்டு அழிந்து போவார்கள், அவர்கள் இரட்சிக்கப்படமாட்டார்கள் (II தெச 2:10-12) தங்கள் உறுதியிலிருந்து விழுந்து போவார்கள் (II பேதுரு 3:17).

மூன்றாவது, கள்ள உபதேசம் பிரிவினையை உண்டாக்குகிறது. (I கொரி. 1:10-13)

கள்ள உபதேசத்தின் விளைவு நித்திய அழிவை ஏற்படுத்துகிற தென்று தெளிவாக தெரிகிறது. நம்முடைய முழுபலத்தோடு போதித்து, விசுவாசித்து கீழ்ப்படிந்து கள்ள உபதேசத்தை நம்மை விட்டு விலக்குவோம்.

**EZSR** **CHARLIE DI PALMA**

# ஒரு பாவம் தானே...

இக்கட்டுரையின் மூலம் மீண்டும் உங்களை சந்திப்பதற்கு வாய்ப்பு கிடைத்தற்காக மிகவும் சந்தோஷம் அடைகிறேன். முதலாவது நம்முடைய தேவனுக்கு ஸ்தோத்திரங்களையும், நம்மை பாவத்திலிருந்து மீட்ட அநேகரை மீட்டுக்கொண்டு இருக்கிற மீட்பர் கிறிஸ்து இயேசுவின் நாமத்திலே வாழ்த்துக்களையும் பகிர்ந்து கொள்கிறேன். பூமியில் வாழ்கின்ற அநேக மனிதர்களை சாத்தானானவன் தன் பிடியிலே பிடித்து வைத்து கொண்டு அவர்களை பாவ வழியில் நடத்திக்கொண்டு இருக்கிறான் என்பதை நாம் நன்றாகவே அறிவோம். இவனின் பிடியிலிருந்து எப்படியாவது அவர்களை மீட்க வேண்டும் என்று நாம் அதிகமாக கவலைப்படுகிறோம்.

ஆனால் இவர்களைக் குறித்து நாம் கவலைப்படுவதைக் காட்டிலும் கிறிஸ்துவை ஏற்றுக்கொண்ட நம்மைப்பற்றி நாம் அதிகமாக கவலைப்படவேண்டும். ஏனென்றால் நாம் இயேசு கிறிஸ்துவின் இரத்தத்தால் கழுவப்பட்டு நீதிமான்களாக மாற்றப்பட்டு இருக்கிறோம் என்று நாம் தெள்ளத் தெளிவாக பேசுகிறோம். அப்படி இருக்கிற நாம் சில வேளைகளில் பாவம் செய்கிறபோது, அந்த பாவம் நம்முடைய மனதை உறுத்துகிறபோது "ஒரு பாவம் தானே" இதனாலே என்ன வந்துவிட போகிறது என்று கூறி, நமக்கு நாமே சமாதானத்தையும், ஆறுதலையும் கூறி தேற்றிக் கொள்கிறோம். நம் மனதை தேற்றிக் கொள்ளக்கூடிய இந்த "ஒரு பாவம் தான்" நம்மை தேவனிடத்திலிருந்து பிரித்து நரகத்துக்கு ஒப்புக் கொடுத்துவிடும் என்பதை அறிந்து கொள்ள வேண்டும். அதைக்குறித்து இக்கட்டுரையின் மூலம் வேத வசனங்களின் உதவியோடும் கற்றுக் கொள்வோம்.

## ஆதாமின் "ஒரு பாவம்"

இந்த உலகத்தில் தாயின் கருவறையில் தோன்றி கல்லறையில் அழியப்போகிற நம்முடைய சரீரத்தை குறித்து நாம் நன்றாக அறிவோம். ஒரு நாள் இந்த சரீரம் மண்ணுக்குள்ளாக போகப் போகிறது. நம்முடைய ஆவி சரீரத்தை விட்டு பிரிந்து தேவனிடத்திற்கு போகப் போகிறது. நம்முடைய சொந்த பந்தங்கள் எல்லாரையும் விட்டு மரணத்தை தழுவப் போகிறோம் என்பதைக் குறித்து நினைக்கையில் நமக்கு ஒரு வித பயமும் துக்கமும் வருவது உண்மை. இந்த மரணத்திற்கு யார் காரணம் என்பதை அறிந்து கொள்ள நம்முடைய விரல்களை வேதாகமத்தில் உள்ள முதல் புத்தகமாகிய ஆதியாகம புத்தகத்தில் 2ம், 3ம் அதிகாரத்திற்கு திருப்புவோம் என்றால் அங்கு நாம் அறிந்து கொள்ள முடியும்.

அந்த அதிகாரத்தில் தேவன் மனிதனை மண்ணினாலே படைத்து அவனுக்கு ஜீவ சுவாசத்தை கொடுத்தார் (ஆதி 2:7) பின்பு அவனிடத்தில் நன்மை தீமை அறியதக்க கனியை புசிக்க வேண்டாம் என்றும் புசிக்கும் நாளிலே சாகவே சாவாய் (ஆதி. 2:16) என்றும் கூறினார். ஆனால் ஆதாம் தன் விலாவிலிருந்து எடுக்கப்பட்ட தன் மனைவியாகிய ஏவாளின் துணையோடும், சாத்தானின் உந்துதலோடும் தேவன் விலக்கின கனியை சுவையோடு புசித்தான் (ஆதி 3:6) அதின் விளைவாக மரணத்தை தேவனிடத்திலிருந்து பெற்றுக் கொண்டு, இந்த உலகத்திற்கு மரணத்தை கொடுத்து விட்டு (ஆதி 3:19) கல்லறைக்கு பொறுப்பாக போய் சேர்ந்தான்.

ஆதாம் செய்தது "ஒரே ஒரு பாவம்தான்" அது என்னவென்றால் "புசிக்காதே" என்ற சொன்ன தேவனுடைய வார்த்தையை மீறி "புசித்தான்". அதன் விளைவு தேவனுடைய சமூகத்தை விட்டு தன் மனைவியோடு, விரட்டி அடிக்கப்பட்டான். (ஆதி 3:24) தேவனுக்கும் அவனுக்கும் இடையே பெரிய பிளவு ஏற்பட்டது. அவனுடைய "ஒரு பாவத்தின்" விளைவு தான் நாம் எல்லாம் இன்று தேவனை விட்டு பிரிந்து அவரோடு உறவாடும் சிலாக்கியத்தை இழந்து விட்டோம். அதோடு மாத்திரம் அல்ல இன்று மனுக்குலம் எல்லாம் மரணத்தை எதிர்பார்த்தே தங்கள் வாழ்க்கையை ஓட்டிக் கொண்டு இருக்கிறார்கள்.

எனவே நாமும் "ஒரு பாவம் தானே" என்று அஜாக்கிரதையாக இருந்தோம் என்றால் தேவனை விட்டு பிரிந்து கிருபையினின்று விழுந்து விடுவோம். (கலா 5:4) அதற்கு பிறகு நாம் இந்த பாவ ஜீவியத்திலிருந்தும் மறுமையில் நரகத்திலிருந்தும் மீண்டு வருவது முடியாத காரியம். எனவே பாவத்தை புறம்பே தள்ளி விட்டு விசுவாசத்தை துவக்குகிறவரும் முடிக்கிறவருமாகிய இயேசு கிறிஸ்துவை நோக்கி நம்முடைய ஓட்டத்திலே பொறுமையோடே ஓடக்கடவோம் (எபி 12:1) ஜெயம் பெறுவோம்.

## மோசேயின் "ஒரு மீறுதல்"

நம்முடைய வேதாகம பக்கங்களில் நம்முடைய இருதயம் அதிகமாக நேசிக்கிற தேவதாசர்கள் யார் என்று கேட்டால் அதன் பட்டியலில் "பூமியில் சாந்த குணமுள்ள மனிதன்" என்றும் "தேவனுடைய சிநேகிதன்" என்றும் தேவனுடைய மனுஷன்" என்று தேவனால் நற்சாட்சி பெற்ற மோசேக்கு ஒரு இடம் நிச்சயமாக இருக்கும் என்பது மறுக்க முடியாத உண்மை. அந்த மோசே எகிப்தின் அடிமைதனப் பிடியிலிருந்து இஸ்ரவேலர்களை விடுதலை செய்து தேவனுடைய வல்லமையான கரத்தின் மூலம் கானானை நோக்கி வழி நடத்தினான்.

அப்படி அவர்களை வழிநடத்தின போது அவர்கள் தண்ணீருக்காக முறுமுறுத்து புலம்பினார்கள். (எண் 20:2,6) அப்போது மோசே தேவனிடத்தில் அந்த ஜனங்களுக்காக கெஞ்சி பிரார்த்தனை செய்தான்.

அப்போது தேவன் அவனை நோக்கி அவர்கள் கண்களுக்கு முன்னே கன்மலையை பார்த்து பேசுங்கள் அப்பொழுது அது தன்னிடத்திலுள்ள தண்ணீரைக் கொடுக்கும். (எண் 20:8) என்றார். ஆனால் மோசே அந்த ஜனங்களின் மேல் இருந்த கோபத்தினால் தேவனுடைய வார்த்தையை மீறி கன்மலையை தன்னிடத்திலுள்ள கோலினால் ஓங்கி இரண்டு தரம் அடித்தான். (எண் 20:11, சங் 106:32) கன்மலையிலிருந்து தண்ணீர் புறப்பட்டு வந்தது அதோடே சேர்த்து தேவனுக்கு மோசே மீது கடுமையான கோபமும் வந்தது.

இதற்கு பிற்பாடு தேவன் மோசேயிடம் நீ இந்த அபாரீம் மலையில் ஏறி நான் இஸ்ரவேல் புத்திரருக்கு கொடுத்த தேசத்தைப் பார். நீ அதைப் பார்த்த பின்பு உன் ஜனத்தாரிடத்தில் சேர்க்கப்படுவாய் என்றார். மேலும் தேவன் சொல்லும் போது "சபையார் வாக்குவாதம் பண்ணின சீன் வனாந்தரத்தில் தண்ணீருக்கடுத்த விஷயத்தில் அவர்கள் கண்களுக்கு முன்பாக பரிசுத்தம் பண்ண வேண்டிய நீங்கள் என் கட்டளையை மீறினீர்களே (எண் 27:12-14) என்று சொன்னார்.

நாம் இங்கு கவனிக்க வேண்டிய விஷயம் என்னவென்றால் தேவன் மோசேயிடம் தண்ணீருக்காக கன்மலையை பார்த்து "பேசு" என்றார். ஆனால் மோசே கன்மலையை ஓங்கி "அடித்தான்" தேவனுடைய "ஒரே ஒரு கட்டளையை" மீறினான், அதனால் அவன் கானான் தேசத்தில் பிரவேசிக்க முடியாதபடிக்கு தேவன் தடை செய்தார். ஆனாலும் மோசே தேவனிடத்தில் அந்த கானான் தேசத்தில் பிரவேசிக்க வேண்டும் என்று கேட்டபோது தேவன் மோசேயின் மீது கோபம் மூண்டவராகி "போதும் இனி இந்தக் காரியத்தை குறித்து என்னோடே பேச வேண்டாம்" (உபா 3:26) என்று கடிந்து கொண்டார்.

மோசேயைக் குறித்து வேதாகமம் "தேவனோடு முகமுகமாய் பேசினவன்" என்றும் "தேவனுடைய வீட்டில் எங்கும் உண்மை யுள்ளவனாய் இருந்தான்" என்றெல்லாம் சொல்லுகிறது. ஆனாலும் கூட அவனுடைய "ஒரே மீறுதலின்" நிமித்தமாக அவன் கானானுக்குள் பிரவேசிக்க முடியவில்லை. எனவே நாமும் கூட தேவனுடைய கட்டளை களிலிருந்து "ஒரு கட்டளையை" மீறுவோம் என்றாலும் நாம் எதிர்பார்த்துக் கொண்டு இருக்கிற பரம கானானுக்குள் போவது அரிதான காரியமாகி விடும் ஆகவே பின்னானவைகளை மறந்து முன்னானவைகளை நாடி பரம அழைப்பின் பந்தயப் பொருளை நோக்கி மீறுதல் இல்லாமல் தொடரு வோம் (பிலி 3:13,14) அதற்கு தேவன் தாமே நமக்கு பெலத்தை கொடுப்பார்.

## அனனியா, சப்பிராளின் "ஒரு பொய்"

குடும்பத்தோடு கர்த்தரை சேவிப்பது என்பது சிலாக்கியமான காரியம் ஆகும். ஏனென்றால் இந்த உலகத்தில் கணவனோ அல்லது மனைவியோ யாராவது ஒருவர் தான் கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டு

இருப்பார்கள். இருவரும் கிறிஸ்துவை ஏற்றுக்கொள்வது என்பது அரிதுதான். முதல் நூற்றாண்டில் அப்போஸ்தலனாகிய பேதுருவின் மூலம் சுவிசேஷம் அறிவிக்கப்பட்டபோது, அநேகர் ஏற்றுக்கொண்டார்கள். ஏற்றுக் கொண்டவர்கள் எல்லாருமே சபையிலே தேவனால் சேர்க்கப் பட்டார்கள். (அப் 2:47) அப்படி விசுவாசிகளாகிய ஆதிக் கிறிஸ்தவர்கள் தங்கள் ஆஸ்திகளையும், காணியாட்சிகளையும் விற்று அப்போஸ்தலருடைய பாதத்தில் பொதுவாய் வைத்து அனுபவித்தார்கள் (அப் 2:44,45) என்று வசனம் கூறுகிறது.


கிறிஸ்துவின் சுவிசேஷத்தை கேட்ட அநேகரில் அனனியா, சப்பிராள் என்ற தம்பதிகளும் இதிலே அடங்கும். அவர்கள் இருவரும் கர்த்தரை ஏற்றுக் கொண்டார்கள். அவர்களும் தங்கள் காணியாட்சியை விற்று அப்போஸ்தலருடைய பாதத்திலே கொண்டு வந்து கொடுக்க வேண்டும் என்று விருப்பப்பட்டார்கள். அதேபோல் தங்கள் காணியாட்சியை விற்றார்கள் (அப் 5:1) ஆனாலும் காணியாட்சியை விற்ற பங்கை பார்த்ததும் இருவருக்கும் அந்த பங்கின் மீது ஆசை ஏற்பட்டது.

அதில் ஒரு பங்கை எடுத்து வைத்து விட்டு, ஒரு பங்கை மாத்திரம் அனனியா அப்போஸ்தலரிடத்தில் கொண்டு வந்தான் அப்போது பேதுரு அனனியாவை பார்த்து "அனனியாவே நிலத்தின் கிரயத்தில் ஒரு பங்கை வஞ்சித்து வைத்து பரிசுத்த ஆவியினிடத்தில் பொய் சொல்லும்படி சாத்தான் உன் இருதயத்தை நிரப்பியதென்ன? (அப் 5:3) என்று கேட்டான், மேலும் பேதுரு, "நீ மனுஷரிடத்தில் அல்ல தேவனிடத்தில் பொய் சொன்னாய் (அப் 5:4) என்று கூறியதும். அனனியா கீழே விழுந்து ஜீவனை விட்டான் (அப் 5:5) அவனை கொண்டுபோய் அடக்கம்பண்ணின பிறகு அவனுடைய மனைவி சப்பீராளும் நடந்ததை அறியாமல் உள்ளே வந்தாள். அவளை பார்த்து பேதுரு நிலத்தை இவ்வளவுக்குத்தான விற்றீர்கள் என்று கேட்டதற்கு அவள் "ஆம்" இவ்வளவுக்குத்தான் என்றாள் பேதுரு அவளை பார்த்து நீயும் மரித்துப்போவாய் என்றான் (அப் 5:7,8) அவளும் உடனே விழுந்து ஜீவனை விட்டாள் (அப் 5:9,10) என்று பரிசுத்த ஆவியானவர் நமக்கு எச்சரிப்பைக் கொடுக்கிறார்.

அனனியாவும், சப்பிராளும் "ஒரே ஒரு பொய்தான்" பேசினார்கள் ஆனால் அது அவர்களுக்கு மரணத்தை கொண்டு வந்து விட்டது. கிறிஸ்துவுக்குள் அருமையானவர்களே மேலே சொல்லப்பட்ட மூன்று உதாரணங்களையும் பார்க்கும் போது நாம், நம்முடைய கிறிஸ்தவ வாழ்க்கையை எப்படி நடத்தவேண்டும் என்பதற்கு இதெல்லாம் நமக்குப் போதனைகளாக இருக்கிறது (ரோம 15:4) எனவே நாம் "ஒரு பாவம் தானே" என்று மனம் போன போக்கில் பாவம் செய்வோம் என்றால் கிறிஸ்துவின் நியாயத் தீர்ப்பு நாளிலே நாம் மற்றவர்களை காட்டிலும் பரிதபிக்கப்படதக்க வர்களாக இருப்போம்.

எனவே நல்ல போராட்டத்தைப் போராடுவோம், விசுவாசத்தைக் காத்துக்கொள்வோம். முடிவிலே ஜீவ கீரிடத்தை பெற்றுக்கொள்வோம். (II தீமோ 4:7,8) அதற்கு தேவன் தாமே உங்களுக்கு உதவி செய்வாராக.

ஆமென். **N. பர்னபாஸ், திருப்பூர்.**



## HEAR THE VOICE OF TRUTH ON RADIO SRILANKA

| LANGUAGE | DAYS | TIME P.M. | ADDRESS | SPEAKER |
|---|---|---|---|---|
| HINDI | Sunday<br>Thursday | 6.45 - 7.00 a.m. | Box. 3815<br>New Delhi - 110049 | Sunny David |
| TELGU | Monday<br>to Friday | 5.30-5.45 | Box. 80<br>Kalkinada - 533 001 | Joshua<br>Gootam |
| TAMIL | Sunday<br>Thursday<br>Friday | 6.45-7.00 p.m.<br>5.45-6.00 p.m.<br>5.30-5.45 p.m. | Box. 8405<br>Bangalore - 560<br>084 | P.R. Swamy |
| MALAYALAM | Friday | 3.45-4.00 p.m. | Sunny Meads Lane,<br>Behind Sansrit<br>College,<br>Trivandrum-695 034 | P.K. Varghese |

## PLEASE WATCH

# ETC TV

**Every Sunday from 6.00 to 6.30 a.m.**

**for a Christian Programme in Hindi**

Please write to these address for Bible
Correspondence Courses,
Magazines and other Christian Litertures

ALL OF THESE PROGRAMMES ARE SPONSERED BY THE CHURCH OF CHRIST

Postal Regn. No. TN / WR / ERD / 77 / 2003
Licensed to Post without pre payment
TN / WR / ERD / 03 / WRP / 2003

Registered News Paper
RNI No. 47661 / 87 - New Delhi
Annul Subscription Rs.30/-

# அஞ்சல் வழி வேதாகமக் கல்வி

## பரிசுத்த வேதாகமத்தை முறையாகக் கற்றுக் கொள்ள விரும்புவோருக்கு


## ஓர் இனிய செய்தி

**ஆம், மிகத் தேர்ந்த முறையில் ஒழுங்கு செய்யப்பட்ட அஞ்சல் வழி வேதாகமப் பயிற்சியில் நீங்கள் விரும்பினால் சேர்ந்து பயன் பெறலாம். இது 15 பாடங்களைக் கொண்ட ஓர் இலவச பயிற்சி.**

**இப்பயிற்சியை வெற்றிகரமாக முடிப்பவர்களுக்கு சான்றிதழ் வழங்கப்படும்.**

**பயிற்சியில் சேர விரும்புவோர் தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி**

இயக்குனர்,
**அஞ்சல் வழி வேதாகமக் கல்வி**
த.பெ. எண் - 27, காங்கேயம்.
தமிழ்நாடு. இந்தியா.



திருமறை ஆசான் இதழின் ஆசிரியர் திருமறை தியானம் நிகழ்ச்சியில் நற்செய்திப்பேருரை ஆற்றுகிறார்.

## ராஜ் டிவி யில் திருமறை தியானம்

பிரதி புதன்கிழமை காலை 6.05 - 6.20 மணிக்கு

## தமிழன் டிவி யில் திருமறை தியானம்

பிரதி சனிக்கிழமை காலை 7.15 - 7.30 மணிக்கு



Published by Church of Christ, Kangayam.
Printed at Konar Printers, Madurai - 625 012. Editor. S. Rajanayagam.